அறிவிப்பு.

கையொப்பக்கனவான்களே!

நமது ப்ரம்மவித்தியா பத்திரிகைக்கு 4-வது ஆண்டு துவக்கி ஆறுமாதங்கட்குமேல் சென்றமையால், பதினைந்து தினங்கட்குமுன் அவரவர்களால் சேரவேண்டிய பாக்கித் தொகைகளையும் நடக்கும் வருடத்திற்குப் பணமுமனுப்புமாறு கார்டுகளனுப்பியும், பத்திரிகைவாயிலாகப் பன்முறை அறிவித்தும், பழைய பாக்கிகளையேனு மனுப்பாது மனச்சாக்ஷிக்கு விரோதமாகச் செய்துவருவது தர்மமா? தபாலாபீசு குமாஸ்தா ... கட்டினுலன்றிப் பத்திரிகை அங்கீகரிக்கப்படமாட்டாதே. இதையெல்லாம் அறிந்திருந்தும் மௌனமாயிருத்தல் எமக்குப்பெருநஷ்டம். யாம இவ்விஷயத்தைப்பற்றிப் பன்னிப்பன்னி எழுதுவது இனி உசிதமாகாது. ஆகையால் அன்புள்ள கனவான்களே தயைகூர்ந்து இனி ஆலஸ்யஞ் செய்யாது பாக்கிகளையும் நடக்கும் வருடத்திற்கு முன்பணமும் அனுப்பிஆதரித்துவரக் கோருகிறேன். கு. ஸ்ரீநிவாசசாஸ்திரி.

சிவரஹஸ்யப்பதிப்புவிளம்பரம்.

இதனல் சகலருக்குமறிவிப்பதுயாதெனில், கும்பகோணம் கல்பா கீழப்பன்தெரு பத்மாநெம்பர்வீட்டில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஸ்ரீவித்தியா அச்சுக்கூடத்தில் இதனடியில் கையொப்பம் வைத்திருக்கிற நானும் ஷை அச்சாபீஸ் மானேஜர் பட்டஸ்ரீ பாலஸரஸ்வதி ஸ்ரீமாந் நாராயணசாஸ்திரிகளும் சேர்ந்து, சிவபிரானது திவ்ய மகிமைகளையும் வில்வதளம், விபூதி, ருத்திராக்ஷம், சிவபூஜை, பாணலிங்கபூஜை, சிவதியானம் முதலியவற்றின் வைபவங்களையும் விரித்துரைக்கின்ற "சிவரகஸ்யம்" என்னும் பெயர்பூண்ட திவ்விய இதிகாஸ ரத்தினத்தை, முதலிலிருந்து பன்னிரண்டம்சங்கள் வரையிலும், (ஒருக்கால் கொடுப்பவர்களிருந்து கொடுக்குப்பக்ஷத்தில் மற்ற அம்சங்களையும் கூட) கிரந்தஎழுத்தில் அச்சில் பதிப்பித்தால் நன்மையத்துள்ள அரண்டியார் உளமகிழச்சாலவுமிடமுண்டாமென நினைத்து, அதனைக் கூடிய சீக்கிரத்தில் நிறைவேற்ற ஒருமுயற்சி யெடுத்துக்கொண்டிருக்கின்றனம். முதல் பன்னிரண்டம்சங்கள்வரையிலச்சிட சுமார் (ரூ) ஐயாயிரம்ரூபாய்க்குக்குறைவின்றி செல்லுமாகையால் அந்தத்தொகைக்கு, அரியநமதாரியசிவபக்தர்களையே கையொப்பக்காரர்களாகச்சேர்த்து அவர்களிடமிருந்து அனுப்பப்படும் முன்பணமாகிய ரூபாய் ரு-க்கும் அவர்களுக்கோர் ரசிதுகொடுத்து பெற்ற அப்பணத்தைக்கொண்டே துடர்ந்ததைநிறைவேற்றக்கோருகின்றோம். கையொப்பக்காரர்கள் லேபிலாயனுப்பாமலே மணியார்டர் மூலமாவது ரொக்கமாயாவது அனுப்பி ரசிதுபெற்றுக்கொள்ளவேண்டியது. வருகிற விகுர்திஞு சித்திரைமீ க-உ தொட்டு புத்தகம் முடியும்வரையில் மாதம் க-க்கு சுமார் ச0 பக்கங்களுக்குக் குறையாமல் ஒவ்வொருசஞ்சிகை அவரவர்களுக்கு அனுப்பப்படும்.

எம். வி. ஸாம்பமேஸ்வரய்யர்.

பட்டையாந்தடல்
பட்டஸ்ரீ பாலஸரஸ்வதி
நாராயணசாஸ்திரிகள்.

ப்ரஹ்மவித்யாமுத்ராக்ஷரஶாலாயாம் விக்ரேதாநி புஸ்தகாநி.

வேதஸாரஶிவஸ்தவம்	0	௧௨	0
ஆதித்யஸ்தோத்ரரத்நம் ஸவ்யாக்யா	0	௧	0
ஶ்ரீ[illegible]ஷ்டகஞ்ச.	0	௧	0
ஶிவதத்த்வவிவேகஸஹித ஶிவகர்ணாம்ருதம்.	௨	0	0
ப்ரஹ்மதர்கஸ்தவ — தத்விவரணஞ்ச.	0	௮	0
ஆத்மார்ப்பணஸ்தவம் — தத்வ்யாக்யா.	0	௪	0
ஶிவமஹிமகலிகாஸ்துதிஸ்ஸவ்யாக்யா	0	௭	0
ஶிவத்யாநபத்ததி:	0	௧	0
ராமாயணதாத்பர்யஸங்க்ரஹஸ்ஸவ்யாக்ய:	0	௨	0
பாரததாத்பர்யஸங்க்ரஹஸ்ஸவ்யாக்ய:	0	௨	0
ஸித்தாந்தலேஶஸங்க்ரஹ:	௧	0	0
ரத்நத்ரயபரீக்ஷா ஸவ்யாக்யா.	0	௨	0
பஞ்சரத்நஸ்துதிஸ்ஸவ்யாக்யா.	0	௧	0
வரதராஜஸ்தவ: ஸடீகம்.	0	௧	0
[illegible]	0	0	௬
ஶிவ[illegible]	0	௪	0
ஆத்மவித்யாவிலாஸ: ஶிவமாநஸிகபூஜா ச	0	0	௬
ஆர்யாஶதகம்.	0	0	௬
ஸாரார்த்தஸம்ஹிதாபாஷ்யம்.	0	௮	0
ஶ்லோகத்ரயீவ்யாக்யா	0	௧	0
[illegible]	0	௫	0
[illegible]	0	௬	0
ஜைத்ரஜைவாத்ருகம்.	0	௬	0
[illegible]ணகம்.	0	௧	0
ஶிவராத்ரிநிர்ணய:	0	௨	0
விஶ்வகுணாதர்ஶசம்பூ:	0	௧	௬
[illegible]விஜய:.	0	௩	0
தயாஶதகம்.	0	0	௬
ஆர்யாஷஷ்டி	0	௧	0
ஸூக்திவர்த்தி:.	0	௧	0
ஸூக்திஸங்க்ரஹ:. நாமாவளி:	0	௨	0
[illegible] [illegible]	0	௬	0
[illegible]விஜய:? ஷை	0	௬	0
[illegible]. ஷை	0	௪0	0
ராஜேந்த்ரவிஜய:	0	௮	0
ப்ரஶ்நோத்தரராமாயணம்.	0	௫	0
மறுபிறப்பு.	0	0	6
நீதிக்கீர்த்தனை.	0	1	6
ஆசௌசவிதி.	0	2	0
ஆன்மாவும் சரீரமும்.	0	0	6
ஆனந்தநடராஜர்பேரில்பாடியசிவசங்கர தீக்ஷிதர் கீர்த்தனம்.	0	0	6

Chidambaram:—Printed and Published for the Proprietor at the Brahmavidya Press, No 76. Senkaloonee Pilliar koil Street.

Damodhara
Damodhara Mudali

ப்ரஹ்மவித்யா

பத்திரிகாமூல்யம்.
1-வருஷ 2 12 0
6-மீ 1 8 0
3-மீ 0 14 0
1-காபி 0 2 6
இலங்கைக்கு
3 8 0

ப்ரம்மவித்தியா பத்திரிகை.

BRAHMAVIDYAPATHRIKA.

பத்திரிகாமுகத்தை மணியார்டராகவாவது ரூபா 1-க்கு அணா 1-சேர்த்துத் தபால்லேபிலாகவாவது சிதம்பரம் ப்ரம்மவித்தியாப்ரெஸ் மானேஜருக்கு அனுப்பவேண்டும்.

மாதம் இருமுறை பிரசுரஞ் செய்யப்படும்.

ஸ்வஸ்தி ப்ரஜாப்ய: பரிபாலயந்தாம் ந்யாய்யேந மார்க்கேண மஹீம் மஹீஶா:॥ ஸர்வே ப்ரஹ்மவித்யாவிதோ பவந்து [illegible]॥

௪-புஸ்தகம்] சிதம்பரம்:— ௧அகூய (1890) மார்ச்சுமீ ௧௨ [இலக்கம் ௰ரு

1890 March

வக்தவ்யம்:

க- [illegible] ஸ்ரீ[illegible] ப்ரகாஶித[illegible] ஐஶ்வர்ய[illegible] ப்ராஸாத[illegible] வேதாந்த[illegible] ப்ரஷ்ணாம் [illegible] காயேந நிர்ணயோ[illegible]

உ- தத்ப்ரக்ஷா[illegible] பத்ரிகாத்வ யோவிதேவ்யா:.

ங- ஶ்ய பாடவத்ரிகாஸ்தத்ரிகாயாம் [illegible] யிதவ்யம் ப்ரேஷ்யேத. தாஸ்[illegible] [illegible] [illegible] ப்ரேஷணீய[illegible]

ச- ஶ்யே பத்ரிகாக்ராஹகா: தேஷாம் நாம ஸர்வாதி ஸ்பஷ்டம் லிகேயு:. பூர்வ ஸ்தாநாந்தரயாந: தத்ஸர்வம் விஜ்ஞாபநீயம்.

ரு- ஶ்ய[illegible]யிகம் விஷய: ஜிஜ்ஞாஸ[illegible] [illegible] ப்ரேஷ்ய[illegible] [illegible] யாம்ஸஞ்ஜாநதே.

சா- ஶ்யப்ரேஷிதா: கோநாவிகாரணேந நப்ரகாஶிதா: சேத் ப்ரத்யர்ப்யந்தே நவா[illegible].

எ- ஶ்யப்ரிநவ[illegible] யாவந் ப்ரேஷ்யதே பத்ரிகா.

இதி-

ரா. நாராயணாய்ய:
நிவேதக:
[illegible]

பத்திரிகாவிதானங்கள்

க. பத்திரிகை வேண்டுவோர் ப்ரம்மவித்தியாப்ரெஸ் மானேஜருக்கு முன்பணமாகவே யனுப்பிப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

உ. கடிதமுதலியவைகளும் மேற்படிமானேஜருக்கே அனுப்புதல்வேண்டும்.

ங. பத்திரிகையிற் பிரசுரிக்கும்பொருட்டு அனுப்பப்படும் கடிதங்கள் காகிதத்தின் ஒரே பக்கத்தில் நல்லமைகொண்டு, சுத்தமுள்ளதாகவும், பொதுதிருத்திக்கேற்றதாகவும் எழுதப்படல்வேண்டும். தூஷணையடங்கிய கடிதங்கள் இடம்பெறா.

ச. கையொப்பக்காரர்கள் ஊர் பெயர் முதலியவற்றை நன்றாகஎழுதியனுப்புதல்வேண்டும். வேறுஊர்களுக்குப் போகநேரிடின் அவ்விலாசத்தை அறிவித்தல்வேண்டும்.

ரு. இன்னும் இதைப்பற்றிவிவரம் அறியவேண்டுவோர் அரையணா லேபிலாவது ரிப்ளை கார்டாவது அனுப்பித்தெரிந்துகொள்ளலாம்.

சா. அனுப்பப்பட்ட கடிதங்கள் எவ்வித அசௌகரியத்தினலாவது பிரசுரிக்கப்படாவிடில் திருப்பவும் வாப்சு செய்யப்படா.

எ. முன்பணம் அனுப்பாதவர்களுக்கு இனிப் பத்திரிகை யனுப்பப்படமாட்டாது.

ரா. நாராயணசாமி ஐயர்,
மானேஜர்,
ப்ரம்மவித்தியா ப்ரெஸ்,
சிதம்பரம்.

உ.

ஸம்ஸ்க்ருதம்.

[illegible]

[illegible]

[illegible]

இதி கு. ஸ்ரீநிவாஸஶாஸ்த்ரீ,

[illegible]

சூதசம்மிதா பிரகடனம்.

ஸ்காந்த மகாபுராணத்துள்ள ஆறுசம்மிதைகளுள் ஒன்றாய் யாவற்றினுஞ் சிறந்ததாய்ச் சுத்தாத்வைத சித்தாந்த நெறியினை நன்கு தெளித்துணர்த்திச் சைவசமயத்துண்மை புகட்டுவதாயுள்ளது இச்சூதசம்மிதையென்பது அறிஞர்கள் யாவரும் அறிந்த விஷயமாம். நம் சைவசமயத்துள்ள விஷயங்களை அறிய விரும்பினும் இச்சூதசம்மிதைவாயிலாக அறியலாம். சிவபெருமானது மகிமையை இந்நூல் விரித்துரைத்து விளக்கும். இந்நூலினைப் பலகால் நன்கு படித்துணர்ந்தே ஸ்ரீசங்கர பகவத்பாதாசாரி சுவாமிகள் மேன்மைதாங்கி மாபாஷ்யம் வகுத்தார்களென்னின், மற்றிதன் பெருமை எளிதில் பேசக்கிடப்பதாமோ. இந்நூலிற்கு சிறந்ததோருரையும் ஸ்ரீவித்தியாரண்ணிய சுவாமிகளால் இயற்றப்பட்டிருக்கின்றது.

இது சைவசமயாபிமானிகளாகிய நந் தென்னாட்டவர்க்கு மிக உபயோகந்தரத்தக்கதாயிருந்தும் இதுவரையில் இந்நாட்டில் வழங்குகின்ற எழுத்தில் அச்சிடப்படவில்லை. பெங்களூரிலிருந்து தெலுங்கு எழுத்தில் அச்சிடப்பட்டப் புத்தக ஒன்று [illegible]று ரூபாவுக்கு விற்கப்பட்டு வருகின்றது. அது தெலுங்கு எழுத்திலிருப்பதால் தெலுங்கு தெரிந்தவர்க்கேயன்றி மற்றையோர்க்கு நந்தென்னாட்டிற் பயன்தராதாதலால், பல அபிமானிகள் வேண்டுகோளின்படி நாம் அதனை இந்த எழுத்தில் யாவர்க்கும் உபயோகமாம்பொருட்டு அச்சிட்டு வருகின்றோம். நாம் முன் கையொப்பக்காரர்களுக்குக் குறித்த காலம் கழிந்துவிட்டமையால் இனி முன்பணமனுப்ப விருப்பமுள்ளவர்கள் ரூபா 3—0—0 அனுப்பதல்வேண்டும்.

இப்புத்தகம் பெற்றுக்கொள்ளவிரும்புவோர் கையொப்பக்காரர்களாகச் சேர்ந்து இதன்விலையாகிய ரூபா மூன்றையும் முன்பணமாக அனுப்புதல்வேண்டும். அப்படி முன்பணம் அனுப்பினோர்க்கு மாசம் 1-க்கு 8-பாரங்கொண்ட சஞ்சிகையாக 16-மாசையிலாவது அல்லது 16 மாசத்தின் பின்னர் உயர்ந்த கலிக்கோ பயிண்டுசெய்த ஒரேதடவையில் புத்தகமாகவாவது அனுப்பப்படும். 10க்கு 1-ம், 25-க்கு 3-ம், 50-க்கு 7-ம், 100-க்கு 15-ம் இனாமாகக்கொடுக்கப்படும்.

பணம் அனுப்புவோர் இதனடியிற்கண்ட விலாசப்படி அனுப்பி ரசீது பெற்றுக்கொள்வதோடு, தமக்கு மாசந்தோறும் சஞ்சிகையாக வேண்டுமாயினும், அல்லது பயிண்டு செய்த புஸ்தகமாகவே பெற்றுக்கொள்ள விரும்பினும் தங்கருத்தைக் கடிதமூலமாகத் தெரிவித்தலும் வேண்டும். ஒரே முறையில் நூறு புத்தகங்கள் வாங்குவோர்க்கு விலை மேற்கண்டதற்குங் குறைந்த ரூபா இருக்குமே.

இங்ஙனம்,
கு. ஸ்ரீநிவாசசாஸ்திரி,
ப்ரம்மவித்தியா ப்ரெஸ் தலைவர்,
சிதம்பரம்.

உபநிஷத்ஸ்வரூபநிரூபணம்.

[illegible]

உபநிடதங்களின் ஸ்வரூப நிரூபணம்.

ப்ரம்மவித்தியாபத்திராதிபர்களுக்கு அநேகவந்தனம். அறிவிற்சிறந்த ஐயன்மீர்! தம்முன்னிலையில் யாமெழுதிய இவ்வுபநிடதோபந்நியாசம் தமதுமேன்மைதாங்கியபத்திரிகையின் ஓர்பக்கத்தில் தம்மினைத் தென்மொழியுடன் விளங்குமென்றெதிர்பார்க்கின்றோம்.

இக்காலத்தில் சில அறிஞர்வேதங்களுள் சங்கிதையென்னுமோர்பாகமொழிய உபநிடதமென்னுமோர்தொகுதி இல்லை எனச்சாதிக்கின்றனர். மற்றுஞ்சிலர் உபநிடதங்கள்பலவுளவென்பர். வேறுசிலர் பத்தேஉபநிடதங்கள் வேதங்களெனவும்,மற்றவை அப்பிரமாணங்களெனவும் வாதிக்கின்றனர் இம்மூவ்வகைவாதங்களுள் ஆராய்ச்சியில் துணியப்படுவதுயாதெனில், மூன்றாமுறையெடுத்துக்காட்டிய வழிஉபநிடதங்கள் ஒன்பதும்ஒன்றுமேபிரமாணமென்பது பலர்கருத்து. அறிஞர்காள் முற்கூறியபடி உபநிடதங்கள் முற்றும்அப்பிரமாணமெனக்கொள்வீராயின், அவ்வழிஆரணங்கள்முற்றும 'மனுகூறியது மருந்தென' எனுமர்வேதசங்கிதைகூறிநிற்க,அவ்விதம்மனுமொழிந்தருளியதிருவறநூலின் 6-ம தொகுதியில் "இவைகளையுமற்றவைகளையும் வனத்தில்வசிக்கும் அந்தணன் அறிவான்; அவ்விதம் உண்மைவெளியாக உபநிடதங்களையுங்கற்பான்" என்றிருத்தலால், உபநிடதங்களெனச் சில தொகுதிகளிருத்தல வெளியாகின்றது. ஆதலின் அவைகளுண்டென்பது துணிபப்படும். அவற்றுள் பிரமாணம் யாதெனில், மேலெடுத்துதகரிக்கப்படும் பத்துபநிடதங்களே. மற்றைய உபநிடதங்களும்பிரமாணமெனக்கொள்ளின் கற்பிக்கப்பட்ட எவ்வித உபநிடதங்களும் பிரமாணமாவதற்குத் தடையாது! இனி ஸ்ரீவேதவியாசாசாரியர் தாமியற்றிய ப்ரம்மசூத்திரங்கட்குப் பத்துபநிடதங்களையே விஷயமாகக் காட்டினூர். எங்ஙனமெனில், 'நியமாச்ச' என்னுஞ்சூத்திரத்திற்கு ஈசோபநிடதமும், 'குஹாம் ப்ரவிஷ்டாவாத்மாநௌ ஹி தத்தர்ஶநாத்' என்னுமிடத்துக் கடோபநிடதமும், 'ஈக்ஷதிகர்மவ்யபதேஶாத்ஸ:' என்றவிடம் பிரச்னோபநிடதமும், 'த்யுப்வாத்யாயதநம் ஸ்வஶப்தாத்' என்றவிடம் முண்டகோபநிடதமும, 'ஆநந்தமயோऽப்யாஸாத்' என்றவிடம்தைத்திரீயோபநிடதமும், 'ஆத்மக்ருஹீதிரிதரவதுத்தராத்' என்றவிடம் ஐதரேயவுபநிடதமும், 'தஹர உத்தரேப்ய:' என்றவிடம் சாந்தோக்கியோபநிடதமும், '[illegible]வ்யபதேஶாத்' என்றவிடம் பிரகதாரண்யகோபநிடதமும், '[illegible]' என்றவிடம் சுவேதாசுவதரோபமும், 'ப்ராணஸ்ததாநுகமாத்' என்றவிடம்

[illegible]

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾.

[illegible]

𑌉𑌪𑌨𑌿𑌷𑌦𑌃.

[illegible]

கௌஷீதகி உபநிடதமும, விஷயங்களாக எடுத்துக்கூறப்பட்டமையால் பிரமாணமாகுமேயன்றி அவ்வாதராயணாசாரியர் மதத்தில் கைவல்லியம், காலாக்கினிருத்திரம், நரசிம்மதாபினி முதலிய உபநிடதங்கள் பிரமாணங்களாக இக்காலத்தில் எலலோரும் ஒப்பத்தக்கமதம் அவ்வியாசாசாரியர்மதமே ஆதலால் மேற்கூறியபத்துபநிடதங்களே பிரமாணமெனத் துணிபற்பாலன. இங்ஙனமிருக சென்ற மகரமாசப்ரம்ம வித்தியாபத்திரிகையில் ப்ரம்மஸ்ரீ ஸ்ரீநிவாசாசாரியரென்பவர் தசோபநிடதங்களினும் வேறான உபநிடதங்களும் பிரமாணமென்றும், அவ்விதஉபநிடதங்கள் ஸ்ரீமத் சங்கராசாரியர் ஸ்ரீவித்தியாரண்ணியர் முதலியமுன்னோர்களால் உரையிடப்பட்டனவென்றும், ஆதல்பற்றி அவைகள்பிரமாணமென்றும் தமது அபிப்பிராயத்தை வெளியிட்டனர். அவ்விஷயத்தை யாம் ஒப்பினோமில்லை. ஒன்றுக்கு உரையிட்டதனுல் மட்டில் அதைப் பிரமாணமாயொப்பினதாக எவ்விதம் சம்மதிக்கலாம்! விவாதப்பட்ட விஷயங்களில் மூதறிஞர் கொள்கையே இங்கு கொள்ளற்பாலதெனக் கூறி யொழிவாம்.

அதிகம் வரின் பின் விரிப்பாம்.

ஒப்பம்,

இங்ஙனம், திருவேங்கிடக்கிராமம்,

திருமலைசாஸ்திரிகள்

ப்ரம்மவித்தியா

சிதம்பரம்:—விரோதி௵ மாசிமீ ௧௧உ ஸ்திரவாரம்.

உபநிடதங்கள்.

ஐயா,—திருவேங்கிடக் கிராமத்தினின்று ப்ரம்மஸ்ரீ திருவெங்கிடசாஸ்திரிகளெழுதிய உபந்நியாசத்தை மேலே வெளியிட்டிருக்கிறோம். அவைகளை முற்றிலும் ஒருவாறு படித்து உண்மையை யறியுங்கள். அவ்வுபந்நியாசத்தினுட்கருத்து உபநிடதங்கள் பத்துத்தான் பிரமாணமென்றும் மற்றவையெல்லாம் அப்பிரமாணங்களென்பதுமே. முன் எமது பத்திரிகையில் ஸ்ரீநிவாசாசாரியரென்பவர் (விக்கிரகாராதனத்தைப்பற்றிப் பாஷ்யாசாரியரெழுதியதற்கு விடைபகருமிடத்து) எழுதியவேர் உபந்நியாசத்திற்கண்ட விஷயத்தை மறுக்கவெழுந்தது இது. அவர் பற்பல காரணங்களைக்கொண்டு மற்றைய வுபநிடதங்களும பிரமாணமெனச் சாதித்தனர். நமது சாஸ்திரியார் அவரெடுத்தோதிய பற்பல காரணங்களுள் ஓர் காரணத்தை (அதாவது மகாசாரியர் அவைகட்குரையிட்டாரென்பதை) யட்டியெடுத்து அதை ஒருவாறு மறுக்கின்றனர். அஃதெங்ஙனமெனில், "ஒன்றுக்கு உரையியற்றினாதல்பற்றியே அதைப் பிரமாணமென ஒப்பினுரென்பது யாங்ஙனமமையும்" என்பது. இவ்வித விவாதம் வாதிகளில்லாவிடம மணம்பெறுமென்பதற்கு யாதுந்தடையில்லை. ஆயினும் இவர் இவ்விதஞ் சொல்லுதலால் வேதவேதாந்தங்களைக் கற்றுணர்ந்த தொல்லாசிரியர் பலர் கொண்டாடிய இச்சித்தாந்தம ஒழியாது. அதற்கு வேண்டிய ஏதுக்களைப்பற்றிப் பின்னெழுதுவாம். தாம்கொண்ட சித்தாந்தம் அநேகர் ஒப்பியதெனக்கூறித் தம்முட்டாமே சந்தோஷிக்கின்றனர். இவ்விடம் அநேகரென்பது ஜைமினி மகரிஷி மீமாஞ்சையிற் கபிஞ்சலாதிகரணத்திற்கூறிய (பன்மையிற்றுனெ) மூன்று பொருளாய்க்கொண்டு முடியுமென்று நம்புகிறோம். இக்காலத்திற் தாமுமோர் சித்தாந்தியெனப் பெயர்கொண்டு வெளிவரும் மூவரோ இவர் மதத்தைக் கொண்டவர்கள். இனி விஷயத்தைத் தொடர்வோமாக. இவர் உபநிடதங்களுள் ஏதோ சில உபநிடதங்களே பிரமாணமென்றும் மற்றவை யங்ஙனமல்லவென்றும் கூறத்துணிந்து முன்வந்தவர். இவர் தசோபநிடதமென வழங்குவது உலகத்தார் வழங்கும் தசோபநிடதங்களையல்ல. (இவர்கள் தசோபநிடதமென வழங்குவது ஈசா, கேனம், கடம், பிரச்னம, முண்டம், மாண்டூக்கியம், தைத்திரீயம், ஐதரேயம், சாந்தோக்கியம், பிருகதாரண்யகம் இவையே.) இத்தசோபநிடதங்களில், கேனம், மாண்டூக்கியம் ஆகிய இவ்விரண்டு உபநிடதங்களை நீக்கிச் சுவேதாசுவதரம், கௌஷீதகி இவ்வுபநிடதங்களைச்சேர்த்து ஓர் வழியாய்ப் பத்தெனக் கணக்கிட்டு அவைகளையே தசோபநிடதமென வழங்கிவருகின்றனர்' இவர் சொல்லிய வுபநிடதங்களன்றி உலகவழக்கிலுள்ள தசோபநிடதங்கள்தான் வேதாந்த வித்தையின் ஆசிரியர்களான முன்னோர்களால் ஒருவழி உரையிடப்படும ஸ்ரீமத் கௌடபாதாசாரியர் முதலிய யோகிகளால் ஒப்புக்கொள்ளப்பட்டதுமா யிருக்கின்றன. நிற்க. இந்நண்பர் ஸ்ரீவேதவியாசாசாரியரையும் உத்தரமீமாஞ்சை என்னும் வேதாந்தத்தில் மாத்திரம் பிராமாணிகராக எண்ணுகின்றனரோதவிர மற்றவிடங்களில் அவர் எழுதுவதைக் குறித்து எண்ணவேயில்லை. எங்ஙனம் எனின், அந்த வியாசாசாரியர் யோகசூத்திரங்களுக் குரைசெய்திருக்கின்றார். அப்பாதஞ்சல பாஷ்யத்தில் (பதஞ்சலிபகவான் இயற்றிய சூத்திரங்களாய யோகசூத்திரங்களுக்கு ஸ்ரீவாதராயணாசாரியர் எழுதிய பாஷ்யம் பாதஞ்சலபாஷ்யம் என்பது. பாதஞ்சலம் யோகம) யோகம் வேதங்களில் எடுக்கப்பட்டது என்றும், வேதாந்தத்துக்கு அங்கம் என்றும் சொல்லவேண்டி யோகசிகைமுதலிய உபநிடதங்களை மூலமாகக் காட்டினார். இவ்விதம் வேதாசாரியர் எனப்படும் வியாசாசாரி

[illegible]

[illegible]

யர் தாம் ஸ்பஷ்டமாய் மற்றைய உபநிடதங்களும் பிரமாணமெனக் கூறிநிற்க, அதை விட்டொழித்துத் துவிதம், அத்துவிதம், விசிஷ்டாத்துவிதம், சுத்தாத்துவிதம் முதலிய பற்பல சித்தாந்தங்களை வகுத்தருளிய பற்பல வாசிரியர்கள் பலவாறு பொருட்படுத்தியதால் மதிமான்களும் மயங்கி வியாசர் உட்கருத்து இஃதெனத் துணிதற்கரிய பிரமசூத்திரங்களுக்கு ஏதோ சில பத்து உபநிடதங்களே விஷயங்கள் என்று எக்காரணத்தாலோ துணிந்ததும் அவ்வலிகொண்டு மற்றவை அப்பிரமாணங்கள் என்றதும் நமது சாஸ்திரியார் மனோதிடத்தாலேயன்றி மற்றதாலல்ல. இவருக்கு ஸ்ரீவேதவியாசாசாரியர் "இஃதே எனதுள்ளம்" எனக்கடிதம் எழுதினார்போலும். இனி வியாக்கியானம் செய்தவரோ எமக்குப் பிரமாணம் என்பரேல் அவர்கள்மேல் ஏற்றிய அந்நம்பிக்கை அவர் செய்தருளிய உரைகளிலும் ஏன் சேராது? அங்ஙனம் அவர் செய்த உரைகளையும் பிரமாணமாகக் கொள்வரேல் அவர்கள் மற்றைய உபநிடதங்களுக்கும் உரையிட்டார். ஆதலால் அவைதான் எக்காரணத்தால் பிரமாணங்களாகா? இனி "வேதவியாசாசாரியரேனும் மற்றெந்தவாசிரியரேனும் பிரமசூத்திரத்திலும் சூத்திரவியாக்கியானத்திலுமே அவர் உண்மை பேசுவார்" என்று நமது சாஸ்திரிகள் கூறுவரேல் இவ்விதம் வியக்கத்தக்க சித்தாந்தத்தையும் அறிஞரொருவர் ஒப்புவரோ? ஐயா! ஸ்ரீவேதவியாசாசாரியர் இயற்றிய சூத்திரங்களுக்குப் பாஷ்யங்களைப்பாருங்கள்! பாஷ்யந்தோறும் அதிகரணங்கள் வேறு விஷயங்கள் வேறு சிறிது எடுத்துரைப்பாம். ஸ்ரீபரமபதியாய பசுபதியின் பெருமையை விளக்கப் புகுந்த ஸ்ரீஸ்ரீகண்டசிவாசாரியர் தம்பாஷ்யத்தில் 'ஶப்³த³விஶேஷாத்' 'சப்தவிசேஷாச்ச' என்னுஞ் சூத்திரத்தை வேறொரு அதிகரணமாக்கி அதற்கு 'நாராயணபரம் ப்³ரஹ்ம' 'நாராயணபரம் ப்ரம்ம' என்னும் வசனத்தை விஷயமாக்கி அதனால் யஜுர்வேதத்தைச்சார்ந்த மகோபநிடதம் வியாசசம்மதமாய்க்காட்டிப் பிரமாணமாகக் காட்டினர். அதே ஆசிரியர் 'த³ஹர' 'தகர' அதிகரணத்தில் அம்மகோபநிடதத்தையும் உதகரித்தார். 'ப⁴க்திப்ரஸாமஞ்ஜஸ்யாத்' 'பத்திபுரசாமஞ்சஸ்யாத்' என்னுஞ் சூத்திரத்தை ஹிரண்ணியகர்ப்பர் அருளிய யோகசூத்திர விஷயமாக உரையிட்டனர். மேலும் பாஞ்சராத்திராதிகரணத்தில் ஸ்ரீமத் சங்கராசாரியசுவாமிகளும் ஸ்ரீஇராமானுஜசுவாமிகளும வேறுபட்டிருக்கின்றார்கள். ஸ்ரீ ஆனந்ததீர்த்தாசாரியரோ காதிற்கேட்கப்படாததும் அத்தியயனத்தில் அகப்படாததுமான பல உபநிடதங்களை விஷயமாக உரையிட்டனர். ஸ்ரீவல்லபாசாரியர் விட்டலாசாரியர் முதலாயினோர் சூத்திரங்களுக்குப் பாகவதத்தையும் விஷயமாக எடுத்துக்காட்டினர். இவ்விதம் ஆசாரிய

[illegible]

ர்களின் அபிப்பிராய வேறுபாட்டால் பிரமசூத்திர விஷயங்கள் இவையெனத் துணியப்படாது சுருதிகளோ! ஸ்மிருதிகளோ! புராணங்களோவெனச் சமுசயப்படத்தக்க நிலையில் இருக்கின்றன. இங்ஙனமிருக்க, ஸ்ரீலோமஞுதர் என்பவர் தமது பாஷ்யத்தில் வியாசசூத்திரங்களுக்கு விஷயவாக்கியங்களாக கதுகமங்களைபேகாட்டியொழித்தனர். இங்ஙனமிருக்க நமது நண்பர் சாஸ்திரியார் ஏதோ காரணத்தால் நிச்சயமாய் இதர உபநிடதங்கள் அப்பிரமாணமெனத் துணிந்தோதினர். இனி இக்காலத்தில் வருணாச்சிரம வைரம் நிறைந்த பிரமராஜிகள் இவ்விதம் ஓர் சித்தாந்தம் சொல்லிவருகிறார்கள். அவர்களும் நமது சாஸ்திரியார் சொல்லுகிறபடிக்கென மாண்டூக்கியங்களைப் பொய்யென்றும், மற்றைய சௌவீதகிசுவேதாசுவதரங்களை மெய்யென்றும ஒப்பார். ஆயின், நமதுசாஸ்திரியார்கொண்ட இவ்வபூர்வ சித்தாந்தத்திற்கு இவர் ஒருவர்; சென்ற பாஷ்யாசாரியர் அல்லது இனி ஒருவர் இருவர் இருப்பரேல் அது அவர்களால் கொண்டாடத்தக்கது. ஆயின் நமது ஸ்ரீநிவாசாசாரியர் எழுதியவாறு மற்றைய வுபநிடதங்களும் பிரமாணம் என்பதே சித்தாந்தங்களைத் தழுவியதும் பல்லாசிரியர்கள் ஒப்பியதுமாம். இனி இது கற்பிதம், இஃதங்ஙனமல்லவெனத் துணிதலும் புராணங்களின் உதவியால் அல்லது மற்றெந்தக் காரணத்தினலாவது கூடும். அதைக்கொண்டே பல்லாசிரியர் கைக்கொண்ட சித்தாந்தத்தை மாற்றக் காரணம் யாதுளது? இனி யாம் 'பல்லாசிரியர்' என்றவிடம் உபயோகித்த பன்மை நமது நண்பரைப்போல் இருவர் மூவரை நோக்கியல்ல. மற்று இங்குப் பல்லாசிரியா என்பதால் அடியிற் குறிக்கப்படும் ஆசாரியர்கள் பொருளாகக் கொள்ளவேண்டியவர்கள். அவர்களாவன: வேதங்களை வகுத்தவரும், புராணங்களைப் பிரித்தவருமான வேதாசாரியர். கன்மகாண்டங்களுக்குப் பாஷ்யமெழுதியும் பிரமசூத்திரபாஷ்யஞ்செய்தும் புகழ்பெற்றவர் பட்டபாஸ்கராசாரியர். ருத்திரபாஷ்யத்தின் முகவுரையில் அவ்விதப் புகழ்பெற்ற வித்தியாரண்ணியசுவாமிகள். அதேவிடத்தில் அங்ஙனம் நாராயணமூர்த்தியின் பெருமைவிளக்குமிடம் ராமானுஜாசாரியர். பரசிவத்தின் பெருமை பகருமிடம் ஸ்ரீகண்டசிவாசாரியர். அங்ஙனம் மத்துவாசாரியர், ஸோமனுதாராத்தியர். கேனம், மாண்டூக்கியம், நரசிம்மதாபினி முதலியவற்றின் பாஷ்யங்களில் சங்கராசாரியர். சிவோத்கருஷ விஷயத்தில் அப்பயதீக்ஷிதர். ஸ்தோத்திரத்திலும் அதின் பாஷ்யத்திலும் யாமுனசாரியரும் வேதாந்ததேசிகரும். ஜயதீர்த்தாசாரியர் முதலாயினோர் சுதாதிகிரந்தங்களில். பஞ்சருத்திரவிருத்தியில்சங்கரானந்தசுவாமிகள். யோககீதைகளில் யாஞ்ஞவல்கியர். வையாகரண சித்தாந்த மஞ்சூஷையில் நாகேசபட்டர்.

[illegible]

சிக்ஷூத்திரபாஷ்யத்தில் சதாசிவசிவாசாரியர். சுதர்சனாசாரியர் சதுர்வேததாத்பரிய சங்கிரகத்தில். பரமார்த்தசாரத்தில் சேஷநாகாசாரியர். திருநீறணிதற்கு விதி கூறுமிடத்தும் போதாயனர். சூலகவகன்மத்தில் சத்தியாஷாடர். அங்ஙனம் ஆசுவலாயனர், ஆபஸ்தம்பர். அரிஹராராதனங்களில் போதயனர். சிவபூஜாவிதியில் பதஞ்சலி. சிக்ஷையிலும் பிராஜத்திலும் பாணினிமுனிவர், காத்தியாயனர். சாரீரத்தில் தனுவந்தரி. இவர்கள் மற்றைய உபநிடதங்களும் பிரமாணமெனக் குறித்தவர். இவர்களைப்போன்ற (வைகானசர் ரங்கராமானுஜர் முதலிய) மற்றவர்கள் பெயரையும் அவர்கள் வசனங்களையும் எடுத்துக்காட்டுவோமேல் இப்பத்திரிகை முழுதும் போதாதென இம்மட்டில் விட்டோம். யாம் எடுத்துரைத்த எமது நண்பர் சாஸ்திரிகள் சிலர் பெயரெடுக்கப் புகுவாராகில் அவர்களுக்குத் தற்காலத்து வித்துவான்களில் ஒரு சிறுபான்மை (அதாவது நாலு ஐந்து பெயர்கள்) கிடைப்பதும் அரிது. ஆராயுங்கால் எல்லோரும் எம்மதத்தவரே. நமது சாஸ்திரியார் வழியில் ஒருவர் இருவர் அல்லது இருவர் மூவர் அல்லது மூவர் நால்வர் அகப்படுவார். இனியாகிலும் நமது நண்பர் சாஸ்திரிகள் "முற்றுமிடம் பெரும்பாலார் கொள்கையே கொள்ளற்பாலது" என்னும் ஜைமினிமுனி திருவாக்கைக்கொண் டுய்வாராக. ஆயின் மற்றைய உபநிடதங்களும் பிரமாணமென ஆசாரியர் கூறியது நன்கே. மேல் வரின் பின்வரும்.

கடிதம்.

கடித கர்த்தர்களுடைய அபிப்பிராயங்கள் பத்திரிகாசிரியரைச் சாரமாட்டா.

திருவிடைமருதூரில் நடந்த சாமசர்களின் சபை.

ஐயா,—யாமெழுதும் இவ்விஷயத்தைச் சிறிது தயைகூர்ந்து தமது பத்திரிகையின் ஓர் கோணத்தில் வெளியிடுவீர்களென மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

கலிமகிமை மிகுந்து வேதவேதாந்த பரிசீலனங்கள் ஒழிந்து தம் வாயில்வந்தபடி மொழிந்து அன்னோர் வழிகளை ஆலஸ்யஞ்செய்து கண்டதே காக்ஷி கொண்டதே கோலமாய் ஆரியர்கள் அனாரியப்படுகுழியில் விழுந்து திரியும் இக்காலத்திலும் ஏதோ முன்னோர் தவவலிமையால் இக்காவேரியாற்றின் கரையில் சிலர் ஆரியர் குலதனமாகிய ஆரணங்களை அகமகிழ்ந்து பயின்று அரிஹராலய திவ்விய மகோற்சவங்களிற் சென்று அன்பர் அகங்குளிரக் கோஷ்டியாய்க்கூடிப் பாராயணஞ் செய்துவருகி

[illegible]

ன்றனர். கலியின்கண் கிருதயுக தர்மத்தைச்செய்பவன் கலிராஜனுக்குப் பகைவனாதலின் அவன் சுவாமி பத்தியற்ற இமயானிடப்படுதலை ஹிம்சிப்பான்" என்று ஆன்றோர் கூறியபடியும், [illegible] பவிஷ்யத்புராணத்தில் [illegible] "யக்ஞங்கள், வேள்விகள் மற்றைய நல்லறங்கள் இவைகளை நிந்திக்கும் இயலராய் முன் அரக்கர் அந்தணர் குலத்திலுதிப்பார்; அவர் கலிவலிமைகொண்டு அவ்வந்தணர்களையே வருத்துவர்" என்று எடுத்தோதியபடியும், இக்காலத்திற்சிலர் அவ்வேத வைரிகளாய்த்தோன்றி [illegible] "முன்னோர்க்கிவ்விதம் உபதேசித்தனர்" என்றபடி முன்னோர் வழி மாறுது சொல்லும் ஒலியும் ஓர்வழி உச்சரிக்கப்பட்டு நம் ஆரியர்களால் உயிருக்குயிராய்க் காப்பாற்றப்பட்ட சொற்றெருகுதியாகிய வேதசங்கிதைகளிலும் பற்பல உள்வேற்றுமைகளையுண்டாக்கி நெடிலைக் குறிலாகவும் குறிலை நெடிலாகவும், உயர்வைத் தாழ்வாகவும் தாழ்வை யுயர்வாகவும் முன்னோர் உச்சரித்து வந்ததற்கு மாறுகத் தாம் ஓர்வழி கட்டி அவ்விதஞ் சிலரை நடாத்தி மற்றவரையும் அவ்வழிக்கு இயக்க, மற்றவர் "யாம் அவ்வழி கொள்ளோம், அவ்வழி கொள்வதுந் தீதே" என்று வற்புறுத்திக்கூறக், கோஷ்டி இரண்டுபட்டு வேதத்தின் உண்மைநிலை இதுதானென்று உறுதியாக அறிவதற்குமுடியாமற்போயிற்று. மறையோர்க்குப் பேரணியாய அருமறைகளின் நிலைமை இதுவாயின், மற்றைய நூல்களையும்பற்றிச்சொல்லவும்வேண்டுமோ! அந்தோ! கொடுமை! கொடுமை!! ஆரியர்களின் துர்ப்பாக்கியம்! பரதகண்டத்தின் பாபம்! உதாரணமாக ஓரிடத்திற்கூடிய சபையின் நடவடிக்கைகளை எடுத்தோதுவாம். கேண்மின்! மத்தியார்ச்சுனஸ்தலமென்னும் திருவிடைமருதூரிற்சென்ற தைமீ உசவபுஷ்பமகோற்சவம நடந்தேறியது. அன்று அங்கு வந்திருந்த சாமவேத வல்லவர்கள் சிலர் ஷையூர் மகாதானத்தெருவில் ம-௱-௱ஸ்ரீ தாசில் ஐயாசாமி ஐயர்வர்கள் கட்டடமாகிய ஸ்கூல் கட்டடத்திற்கூடி ஏதோ தமக்குள் சாமவேத விஷயத்திலிருக்கும் விவகாரங்களைத் தீர்த்துக்கொள்ள ஓர் சபை ஏற்படுத்திக்கொண்டனர். அச்சபை இரவு சுமார் ஏழுமணிக்குத் தொடங்கப்பட்டது. அதில் வந்திருந்தவர்கள் ப்ரம்மஸ்ரீ சுப்பிரமணியசாஸ்திரிகள், மன்னார்குடி. ப்ரம்மஸ்ரீ நீலகண்டதீக்ஷிதர், ராதாநரசிம்மபுரம். ப்ரம்மஸ்ரீ ராமசந்திரசாஸ்திரிகள், திருவிசைநல்லூர். ப்ரம்மஸ்ரீ சங்கரசாஸ்திரிகள், திருவிசைநல்லூர். ப்ரம்மஸ்ரீ அண்ணுவாஜபெயர், திருவிடைமருதூர். ப்ரம்மஸ்ரீசுந்தரவாஜபெயர், திருவிடைமருதூர். ப்ரம்மஸ்ரீ அண்ணுசுந்தரசாஸ்திரிகள், திருவிடைமருதூர். ப்ரம்மஸ்ரீ வெங்கிட்டராமசிரௌதிகள், கும்பகோணம. ப்ரம்மஸ்ரீ கிருஷ்ணசுவாமி சிரௌதிகள், திருவிசைநல்லூர். இவர்களில் வெங்கிட்டராம சிரௌதிகளென்பவர் சாமவேதவிஷயத்தில் இதுவரையில் இருந்த பெரியோர்கள்

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

அத்தியயனஞ் செய்துவந்தபடியே சொல்வது அவிவே இலக்கணத்திற்கொத்ததென்றும், அப்படியே நியாயமென்பதைப்பற்றி மேற்கண்ட ப்ரம்மஸ்ரீ கிருஷ்ணசுவாமி சிரௌதிகள் பிதா ப்ரம்மஸ்ரீ ராமண்ணசாஸ்திரிகள் தம் போன்ற பலர்க்கு வழுவறக் கற்பித்தாரெனவும், அவ் விஷயத்தில் யாவர் குற்றங்கூறினும் அவர் வாதத்தை யாம் இலக்கணங்கூறி மறுப்போமெனவுங் கூறிநின்றனர். ப்ரம்மஸ்ரீ கிருஷ்ணசுவாமி சிரௌதிகள் "தமது பிதா தமக்கும் மற்றவர்க்கும் வேதஞ்சொல்லி வைத்தது உண்மையாயினும் அவர் காலத்திற்றானே "மாத்திராலக்ஷண" மென்று ஓர் புத்தகம் தம் வீட்டிலிருப்பதாகவும், அதை எடுத்துப் பொருட்படுத்த வல்லவர் தமக்கொருவருங் கிடைக்கவில்லை" என்றும சொல்லிவந்தார். அதைக் கேட்ட யான் அப்புத்தகத்தை அவர் காலத்திற்குப்பிறகு எடுத்துப்படித்து அதன் உட்பொருளேயும் ஒருவாறு அறிந்தேன். அதை ஆராய்ந்தபிறகு சாமவேதத்தை முன்னோர் அத்தியயனஞ்செய்தவழி வழுவென்றும், குற்றமற்றதோர்வழி மற்றதென்றும் அறிந்து அவ்விதமே மற்றவர்க்குக் கற்பித்தும் வருகின்றேன். அவ்விஷயத்தில்ஏதேனுமிலக்கணக் குறைவு இருக்குமேல் யானதைத் தள்ளி மற்றதைக் கொள்வேன். ஆதலால் எனது அத்தியயனத்தின் குற்றங்களை மற்றவரோ எடுத்துச் சொல்லலாமென்றனர். இவ்விதஞ் சொல்லியபிறகு அவ்விருவரும் அங்கு வந்திருந்த பண்டிதர்களை மத்தியஸ்தங்கூறி விவாதந் தொடக்கினர். அம்மத்தியஸ்தரி லொருவராகிய இராமசந்திரசாஸ்திரிகள் இவ்விருவர்களில் கிருஷ்ணசுவாமி சிரௌதிகளைப்பார்த்துப் பழைய பாடத்திலுள்ள குறைவுகளைப்பற்றி நீர் ஓர் கேள்வி கேட்கலாயென்றார். உடன் மேல் நடந்த சம்பாஷணை.

கிருஷ்ணசுவாமி சிரௌதிகள். "[illegible]" என்கிறவிடத்தில் எல்லா அக்ஷரங்களும் இரண்டாவது சுவரமென்று இலக்கணத்தாலேற்பட 'நா' என்னுமோர் எழுத்தை உயர்த்திச் சொல்வது யாதுகாரணம் பற்றி!

வெங்கிட்டராமசிரௌதிகள். ஒவ்வொரு சுவரத்திலும் உள்வேற்றுமைகள் ஆறுண்டாதலால் அதே சுவரத்தில் அவ்வோரெழுத்து உயர்ந்தொலிக்கின்றது.

மத்தியஸ்தம் ராமசந்திரசாஸ்திரிகள். வெங்கிட்டராம சிரௌதிகளே ஒவ்வோர் சுவரத்திற்கும் ஆறு பேதங்களுண்டென்பதற்குப் பிரமாணம் யாது!

வெ. லக்ஷணத்தில் "[illegible]" "சாமத்தில் உயர்ந்த 'குருஷ்டம்' போன்ற சுவரம் யாதுளது!" என்றிருத்தலாலும், சாமவிதானப் பிராமணபாஷ்யத்தில் [illegible] "குருஷ்டம் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறெனச் சுவரங்கள் ஏழுவகை. உள்வேற்றுமைகளைக்கொண்டு இவைகள் பலவாக நிற்கும்" என்றிருத்தலாலும், "[illegible]" "உயர்வுதாழ்வுபற்றியே சுவரங்கள் வேறுபாடடையும்" என்றிருத்தலாலும், "உச்சம்—உயர்ந்தது, உச்சதரம்—அதிகமுயர்ந்தது, உச்சதமம்—அதிலுமுயர்ந்தது, நீசம்—தழ்ந்தது, நீசதரம்—மிகத்தாழ்ந்தது, நீசதமம்—எல்லாவற்றிலுந்தாழ்ந்தது" என்னும் அறுவகை ஒவ்வோர் சுவரத்திலும் உண்டென ஏற்படுகிறது.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

ம. ரா. கிருஷ்ணசுவாமிசிரௌதிகளே அங்ஙனமுண்டா?

கி. அங்ஙனமில்லை; உச்சம், உச்சதரம், உச்சதமம், 'மத்தியம்' நீசம், நீசதரம், நீசதமம் எனக்குருஷ்டமுதலிய முற்கூறிய ஏழு சுவரங்களும் வேறு பெயரால் கூறப்படுமேயன்றி அவைகள் ஒவ்வோர் சுவரங்களின் உள்வேற்றுமைகளல்ல.

ம. ரா. அஃதென்னய்யா 'மத்தியம்' என்று ஒன்றுரைத்தீர். அதற்கு ஆதாரம் பட்டசோபாகரர் பாஷ்யத்திலுண்டா? இல்லை. இது யஜுர்வேத லக்ஷணத்திலிருக்கின்றது.

ம. நிகழும் விவாதம் சாமவேதத்தைப்பற்றியாதலால் அதில் நீவிர் கூறிய மத்தியம் என்பது இல்லாமையாலும், முற்கூறிய பிராமண வசனத்தில் அவைகளுக்கு உள்வேற்றுமை உண்டென்பது வெளிப்படுதலாலும், உயர்ந்த குருஷ்டம்போன்ற சுவரமென்னுமிடத்தில் சுவரத்தில் உயர்வென்னுமோர் குறிபிருத்தலாலும், உள்வேற்றுமைகள் அறுவகை உண்டெனச் சொல்வது நியாயம். மற்றோர் வேதவிலக்கணத்தை இவ்விஷயத்திற்கிலக்கணமாக்குதல் அவ்வளவுசிதமல்ல. அவ்விதமொப்பினும் ஒவ்வோர் சுவரங்களுக்கும் உள்வேற்றுமை யுண்டெனச் சாற்றிய விலக்கணங்களுக்கு இலக்கியம் யாது?

கி. மத்தியஸ்தர்களைநோக்கி ஐயா! அங்ஙனமாயினும் முன் யான் எடுத்தோதிய இலக்கியத்தின்கண் 'நா' என்பதைபட்டில் உயர்த்திச்சொல்வதற்குக் காரணம யாது?

வெ. எந்தவிடத்தில் இலக்கணமகப்படவில்லை அங்கு நமது ஆசாரியர் உச்சரிப்பே பிரமாணமாகையால் அங்கு அவ்விதஞ் சொல்லுகின்றோம்.

ம. அவ்விதஞ் சொல்லுவதற்கு இலக்ஷணமுண்டா?

வெ. உண்டு. "[illegible]" "ஆசாரியன் செய்யுந் தொழில் ஐந்து. முகம், நியாஸம், கரணம், (சிக்ஷாசாஸ்திரம்) பிரதிஞ்ஞை (முன்னோர்வழி மாறாது அவ்வவ்வொழுக்கங்களைக்கசடறக்கற்றல்) உச்சாரணம் என்றிருப்பதாலும "[illegible]" "ஓர் வர்ணத்திற்கு எங்கேனும் கரணம் கிடைக்காவிடில் முன்னோர் உச்சரிப்பே அங்குபிரமாணமென்று சொல்லியிருத்தலாலும், 'நா' என்னும் அக்ஷரத்திற்குப்பிறகு உச்சமாகத்தான் சொல்லவேண்டும்.

ம. ஆம், சரி.

கி. அவ்வித ஆசாரியர்யாவர்? —ஞ—ஞ இங்குள்ளமத்தியஸ்தர்களனைவரும்பக்ஷபாதிஎன்றெழுந்துவிட்டனர்.

ஐயன்மீர்! வைதிகசகஸின் விமர்சையைப் பார்த்தீர்களா! இன்னுமதில் நடந்த விநோதங்களைப்பற்றிப் பிறகு எழுதுகிறேன். அதிகமாகத் தமது பத்திரிகையை ஆக்கிரமிக்குமென இம்மட்டோடு நிறுத்தினேன்.

கண்டதை விண்டோன்.

விதவோத்வாஹஸ்ய வைதிகத்வநிரூபணம்.

[illegible]

விதவாவிவாகம் அவைதிகமென்பது.

ஐயா! இக்காலத்தில் கலியின் கொடுமை மிகுதியால் நம்மவர் பழக்கம் ஒழிந்து மேற்றிசையார்பழக்கமே விட்டுவர நம்மவர்களே அவர்கள் சொல்லுவதைக் குரு உபதேசமாகக்கொண்ட சில வந்தணர்கள் நம்முன்னோர் வெறுத்தொதுக்கிய கைம்பெண் மணக்கோலத் திருக்கோலத்தைத் தாமனுட்டிப்பதுமன்றிப் பிறரையும் இத்தீயநெறியிற் சேர்க்கக்கருதிச் சுருதிகளும் ஸ்மிருதிகளும் இவ்விஷயத்திற் பலவுளவென ஏதேதோ சொல்லிக் களிகூறுகின்றனர். இஃது இவ்விவாக வழக்கம் அநாதியும் வைதிகமுமாயின், இஃது இடையில் யாதுகாரணம்பற்றி யொழிந்தது? நிற்க. முற்காலத்திற்றான் இதையனுட்டித்த விப்ரோத்தமர் யாவர்? அவர் பெயர் யாது? யாமாராய்ந்தமட்டில் இஃது அவைதிகமென்றே எமதுபுத்திக்கெட்டியது. அவ்விஷயத்தில் யாமெழுதும் பிரமாணங்களிலும் அதிகம் நம் ஆரியபண்டிதமணிகள் வரைவார்களென எதிர்பார்க்கிறோம். இதில் முதலில் வேதத்தை விளக்கிக்காட்டுவோம். "கந்யலா பித்ருப்யோ யதீ பதிலோகமவ தீக்ஷாமதாஸ்த ஸ்வாஹா ப்ரேதோ முஞ்சாதி நாமுதஸ்ஸுபத்தாமமுதஸ்கரத்" இதற்கு ஹரதத்தாசாரியரெழுதிய வியாக்கியானம்:—'கந்யலா' 'கன்யலா' இக்கன்னி, 'பித்ருப்ய:' 'பிதுருப்ய:' தகப்பன் குலத்தை விட்டொழித்து, 'பதிலோகம்' 'பதிலோகம்' தனது மணவாளன் குலத்தை, 'யதீ' 'யதீ' அடைந்து, 'தீக்ஷாம்' 'தீக்ஷாம்' கன்னிவிரதத்தை, 'அவதாஸ்த' 'அவ அதாஸ்தா' விட்டொழித்தான்; (ஓ இந்திரா! இந்தக்கன்னியை) 'இத:' 'இத:' இத்தகப்பன் குலத்தினின்று, 'ப்ரமுஞ்சாதி' 'பிரமுஞ்சாதி' விடுவிப்பாயாக. (இதிற்பிறவினைப் பொருளடங்கியது) 'அமுத:' 'அமுத:' இப்பதிகுலத்தினின்று 'ந' 'ந' விடுவிக்காதே; (மற்று) 'அமுத:' 'அமுத:' அக்குலத்தின்கண் 'ஸுபத்தாம்' 'சுபத்தாம்' நன்குகட்டுண்டவளாக 'கரத்' 'கராத்' செய்வாயாக" என்பது. இவ்வேதவாக்கியத்தால் புனர்விவாகமானது கூடாதென்பது வெள்ளிடைமலைபோலத் தெள்ளிதிற் றோன்றியதல்லவா? அறிஞர்காள்! இவ்வேதத்தை உற்றுநோக்கில் ஒரேகாலத்தில் ஓர் கன்னி தன் தகப்பன் குலத்தை விடுவதும், கன்னிபவிரதத்தை ஒழிப்பதும், மணவாளன் குலத்திற் புகுவதும் வெளியாகின்றதே. முன்னோர்முறை இந்திரனைப் பிரார்த்தித்து தன் சம்பந்தத்தை விலக்கி மற்றோர் மணவாளனிடம் கன்னிவிரதத்தை ஒழித்து ஒப்புவிக்கப்பட்ட தன் மகளை அம்மணவாளன் உயிர் துறந்தபொழுது மீண்டு மற்றொருவனுக்குக் கொடுக்க முற்பிதா எவ்விதம் அதிகாரியாவன்? ஒவ்வொருவனும் தன்கைப் பொருளையல்லவோ தானஞ்செய்தல் நியாயம். முற்கூறிய வேதவாக்கியத்தால் ஒருவாறு தன் சம்பந்தத்தை நீக்கி மணவாளன் குலத்தையடைந்த கன்னியை மீண்டும் அப்பிதா அக்கன்னியைத் தானஞ்செய்ய அபாத்திரமுள்ளவனாகின்றானல்லவா? முன் இம்மந்திரத்தை யுச்சரித்துத் தன் சம்பந்தத்தை அக்கன்னியிடம் விலக்கிக்கொண்ட அப்பிதா மறுபடி தான் சம்பந்தமுள்ளவன்போல மந்திரத்தை யுச்சரித்தல் யாங்ஙனமமையும்: வரும்

வைதிகாசார தூஷண பர்த்தனம்.

இந்து ஸ்திரீ புனர்விவாக சீர்திருத்த விசாரம்.

மகாகனம்பொருந்திய இந்துக்கள் பலருக்கும் வந்தனம். ஐயன்மீர்! சென்ற ஜனவரிமீ உஉ-உ வெளிப்பட்ட சுதேசமித்திரன் பத்திரிகையில் "விண்டுநேமி" யெனக் கைநாட்டியிருக்கும் பண்டிதரொருவர் "இந்து ஸ்திரீ புனர்விவாகம்" என்னும் மகுடத்தின்கீழ் சில வரிகள் வரைந்திருக்கின்றார். அது முற்றும் படித்துப்பார்க்க எமக்குண்டான மனவருத்தம் சகிக்கமுடியாதாயிற்று. அதுபற்றி இங்கு சிறிது பேசத்துணிந்தோம். நடுநிலைமையுள்ள பத்திராதிபர்கள் இதைப் பிரசுரிப்பார்களென நம்புகிறோம்.

ஐயா! விண்டுநேமி! நீர் வைதிகசிரோன்மணிகளாகிய எம்மவரைச் "சுபகாரிய துரந்தர விரோதிகள்" என்றும், அவர்கள் ஜாதிமுதல் அனுஷ்டித்துவரும் வைதிக சதாசாரங்களை, "அஞ்ஞானப்பழைய வழக்கம் பாழும் வழக்க"மென்றும், வாய் கூசாமல் வைது கைகூசாமல் வரைந்துவிட்டீரே! விண்டுநேமி! சற்று நின்று பேசும்! நுமது தோழர் பெண்ணொருத்தி "முக்கியமாய்ப் பிராமணருக்குள் நடக்கும் பொம்மைக்கலியாணத்தின் கேடாய்க் கலியாணத்தின் கடமையும் பெருமையுந் தெரிந்துகொள்ளக்கூடாத கன்னிப்பருவத்திலேயே கடிமணஞ் செய்யப்பட்டு சு-மாசத்தின்முன் தான் கைம்பெண்ணானாள்" என்று கூறினீரே. இந்தப் பொம்மைக் கலியாணம் நுந்தோழர் புத்திரிக்கு நடப்பித்தவர் யாவர்? [illegible]து சாஸ்திரங்களிலே பெண்களுக்கு விதிக்கப்பட்டிரு[illegible]ற விவாக காலம் ஏழு அல்லது எட்டுவயது முதல [illegible] பருவம் கிட்டுகிறவரையிலுண்டென்றும், அப்படியிருக்க அறிவில்லாச் சிறு குழந்தைகட்கு விவாகஞ்செய்வது சாஸ்திர விரோதமாயிருப்பதோடு அதனால் பல பாலிய விதவைகள் மலிந்து விபசாரம், கருத்துரோகம், சிசுஹத்தி முதலிய அனுசிதங்கள் உலகிற் பரவித் தேசங்கெடுகிறதென்றும், இத்தேசத் துர்வழக்கத்தை இனி நம்மவர் கட்டோடு விட்டொழிக்க வேண்டுமென்றும் பலமுறை பெடுத்தோதிப் பத்திரிகைகளில் வரைந்துவந்த நும்மவர் தாமே "ஓதியுணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தாமடங்காதவராய்" இந்தப் பொம்மைக் கலியாணத்தை நடத்திய காரணமென்னே! இப்படிச் சொல்வேறு செய்கை வேறாய் ஓர் நிலையின்றி மாறியோடும் சுபாவமுடைய நும்மவர் அறிவொழுக்கங்களைத்தானு உலகிலுள்ள புத்திமான்களெல்லாம் பின்பற்றி வாழ வாருங்களென்று கைகொட்டியழைக்கப் புறப்பட்டீர்? ஐயா! விண்டுநேமி நமது சுபகாரிய துரந்தர விரோதிகள் என்று வயிற்றெரிச்சலோடு வைதீரே! அவர்ங்ஙனம் விரோதிகளாவதை யெங்ஙனங் கண்டுபிடித்தீர்! விதவாவிவாகம் நடப்பதில் வைதிகர்கட்கு வரும் நஷ்டமென்னை! இத்தேசத்தில் ஒரு பெண்ணுக்கு ஒருமுறை விவாகம் நடந்தால் வைதிகர்க்கு ஒரைந்துநாள் போஜனமும் இயன்ற தக்ஷிணையுங் கிடைப்பது வழக்கம். இருமுறை விவாகம் நடக்குமாயின் இரண்டுபங்கு சாப்பாடும் தக்ஷிணையுங் கிடைக்குமல்லவா? அதுமாத்திரமா? "ஒரு பெண்ணுக்குக் கணவனிறந்தால் துவிதீய விவாகஞ் செய்யலாம்; அவனுமிறந்தால் திரிதீய விவாகஞ்செய்யலாம்; பிறகு சதுர்த்த விவாகமுஞ் செய்யலாம்; துரோபதைக்கு ஒரேகாலத்தில் ஐந்து கணவர் இருக்கவில்லையா?" என்று நும்மவரை உற்சாகப்படுத்தி அவர் மனோபீஷ்டத்தின்படி ஒத்துப்பிடிப்பார்களாயின் அவர்களோடு மெத்தைகளின்மீதேறவும், குதிரை யிரதங்களிலூரவும், நல்ல சீமைப் பதார்த்தங்களோடு மேஜை மீதிருந்து புசிக்கவும், இவ்வைதிகர் தரித்திரம் நசிக்கவும் பெறுவரன்றோ? இப்படிப் பிரத்தியக்ஷ லாபமுஞ் சுகமுங்கிடைக்கிறபோது நும்மவரை யெம்மவர் விரோதிப்பானேன்? ஆனால் ஏன் விரோதிக்கிறார்களெனில் அதன்காரணம் மேலே படித்துப்போனால் தெரியும்.

விண்டுநேமீ! நும்மவர் பலரும் பெரிய பெரிய இங்கிலீஷ் பட்டங்களும், உத்தியோகம் செல்வம் செல்வாக்குகளும் பெற்றவர்கள். இவர்கள் தங்கள் கைம்பெண்களுக்கு ஒருமுறையை விட்டு ஒன்பது தடவை வேணுமானாலும் விவாகஞ்செய்து சாதிக்க வல்லவர்கள். அந்த மாப்பிள்ளைகட்குப் பெண்ணோடுகூட ஆயிரம் ஐந்நூறு கொடுக்கவும் சிறந்த உத்தியோகத் துறைகளில் விடுக்கவும் வல்லவர்கள். இஃதிப்படியிருக்க, தற்காலம் சர்க்கார்க் கணக்கின்படி இத்தேசத்து ஜனங்களைப் பரிசோதித்தால் ஆண்களைக்காட்டிலும் பெண்களே பல ஆயிரக்கணக்காய் அதிகப்பட்டுப் பிறந்திருக்கிறதென்பது யாவர்க்குந் தெற்றென விளங்கும். அதிலும் ஏழைகட்கே பெண்கள் அதிகமாய்ப் பிறக்கின்றன. உதாரணமாக: எமக்கு ஒரு ஆணும் மூன்று பெண்களும் பிறந்திருக்கின்றன. இப்படி இயற்கையாகவே பெண்களைக்காட்டிலும் தொகையிற் குறைந்திருக்கும் இத்தேசத்து ஆண்மக்கள் விவாகபருவம் அடைகிறபோது நும்மவரெல்லாம் எழுந்துநின்று "ஓடிவாருங்கள்; உங்கட்கு உடனுக்குடனே சுதந்தரத்தக்க பருவம் வாய்ந்த எங்கள் கைம்பெண்களைக்கொடுக்கிறோம்; அதோடு பொருளும் அதிகாரமுங் கொடுத்துப் பெரிய மனிதர்களாகிய நாங்களெல்லாம் மாமன் மைத்துனர்களாக விளங்குகிறோம்." என்று கைகொட்டிக் கூப்பிடுவார்களாயின், இந்த ஏழை வாலிபர்கள் சோறு கண்ட காக்கைபோல் ஓடி அந்த விதவைகளைக் கூடிவாழ நினைப்பார்களா? அல்லது அஷ்ட தரித்திரம் பிடித்த எம் வைதிகர் பெண்களைக் கட்டிக்கொண்டு சோற்றுக்குத் திண்டாட விரும்புவார்களா? [illegible] ஆலோசித்துச் சொல்லும்! "ஐயோ! ஐயோ! ஏழைகளாகிய நாங்கள் இத்தனை பெண்களுக்கும் எப்படி விவாகம் முடித்துத் தலையெடுப்போம்; [illegible]பிள்ளைகளை [illegible] சம்பாதிப்போம்" என்று ஏங்கியிருக்குந் தருணத்தில் (விழுந்த பிள்ளைக்கு அரிவாள்மணை யுதவியது) போல "ஊரிலுள்ள ஒண்ணா மாப்பிள்ளைகளையுந் தங்கள் கைம்பெண்களுக்காகக் கொள்ளையடித்துக்கொண்டு எங்கள் ஏழைப் பெண்களையெல்லாம் அதோகதியில் விடுவதற்காகவா நும்மவர் திருவவதாரஞ்செய்தார்கள்! இனி ஒரு மாப்பிள்ளைக்கு இரண்டு மூன்று பெண்களை விவாகஞ்செய்விக்கலாமென்றாலோ, அது புத்திமான்களால் வெறுக்கத்தக்க காரியமாயிருப்பதோடு அது பிரத்தியக்ஷ ராஜதண்டனையாக முடியும். ஒரு விவாகஞ்செய்வதற்கே பொரு

னில்லாத நம்தேசத்து ஏழைகள் பலர் பீஷ்மாசாரியர்களாயிருப்பது யாவருக்குந் தெரியுமன்றே? விண்டுரேமி! லோகோபகாரிகளென்றும் சீர்திருத்தஞ் செய்கிறவர்களென்றும் பேர் வைத்துக்கொண்டு "சாஸ்திர விரோதம் வந்தாலும் வரட்டும்; பாவமும் பழியும் நேர்ந்தாலும் நேரட்டும்; மற்றைக் கன்னிமாரெல்லாம் எக்கேடு கெட்டாலும் கெட்டும்; நம் வயிற்றிற் பிறந்த பெண்கள் மட்டும் நித்திய சுமங்கலிகளாய்க் காமசுகமனுபவித்துக்கொண்டு கண்ணெதிரே வாழ்ந்தாற் போதும், பசிக்குப் பனம்பழந் தின்றாற் பித்தம் பட்டவாக்கிற்படுகிறது" என்று துணிந்து விதவாவிவாகஞ் செய்யப்புகுந்த நம்மவர் சுயகாரியப்புலிகளா? அல்லது தங்கட்குக் கிடைப்பதாகிய லாபத்தையுஞ் சுகத்தையுஞ் சட்டைசெய்யாமல் சத்தியத்திற்கும், தருமத்திற்குங் கட்டுப்பட்டுத் தமக்குள்ள ஆரிபாசாரத்தை அழியாது காக்க முயலும் எம்மவர் சுயகாரியப்புலிகளா? நீரே சொல்லும்!

விண்டுரேமி! நாமிப்படி எடுத்துக் கூறுங்கால் நும்மவரெல்லாம் ஒருங்குகூடி நின்று "போங்காணும்போம்! ஏன் சும்மா கத்துகிறீர்! உமது தரித்திரம் பிடித்த பெண்களுந்த மாப்பிள்ளைகள் வேணுமாயிருந்தால் இந்த வீணன ஜாதிக்கட்டுப்பாட்டையும், குருட்டு முரட்டுச் சமயாசாரப்பாழும் வழக்கங்களையும் ஆணிவேரோடறுத்தெறிந்து பறையர், பள்ளர், மிலேச்சர், பார்ப்பார் முதலிய எல்லாச் சாதியாரும் ஒன்றுகூடி ஒருவர்க்கொருவர் கொண்டு கொடுத்துக் கோமாம்ஸம் முதலியவைகளோடு ஓர் பந்தியிலிருந்து உண்டு வாழக்கூடாதா? உங்கட்கு அறிவில்லாமல் வீணே கெட்டுப்போனால் அதற்கு யாரென்னசெய்யலாம்!" என்று எம்மவரை இடித்துப் புத்திகூறத் துணிவாரென்பதிற் சந்தேகமுண்டோ? "அப்படிச்செய்வதற்குச் சாஸ்திரவிதியில்லை" யென்பீராயின் விதவா விவாகத்திற்குச் சாஸ்திரத்திலே விதி கண்டுபிடித்த நும்மவர் இதற்குமட்டுங் கண்டுபிடிக்காமற் போவார்களா? மனுஸ்மிருதி முதலானவைகளில் "பிராமணர்முதலா[illegible]தாதிகளிற்கூட மாம்ஸபோஜனஞ் செய்ய[illegible] கூறப்பட்டிருப்பது பள்ளிப்பிள்ளைகட்குந்[illegible]மல்லவா! "அப்படியல்லகாணும் அந்த விதி, [illegible] நும்மென்றும் இக்கலியுகத்திற் கூடாதென்[illegible]லம் வியாக்கியானங்கள் எழுதிய பெரியோர் விதித்திருக்கிறார்கள்" என்பீராயின், அந்தோ! அப்படி விதிவிலக்குக் கூறவந்த வியாக்கியாதாக்கள்தான் நும்மவர்க்கு ஜன்ம சத்துருக்களாச்சுதே? அவர்களைக் கழுத்தைப்பிடித்து நெட்டி எல்லைக்கப்பால் தள்ளிவிட்டல்லவா நும்மவர் புனர்விவாகத்தைத் தாபிக்க வெளிவந்திருக்கிறார்கள்.

இன்னும்வரும்.

[illegible]

[illegible]	௦	௧௨	௦
[illegible]	௦	௧	௦
[illegible]	௦	௧	௦
[illegible]	௨	௦	௦
[illegible]	௦	௮	௦
[illegible]	௦	௪	௦
[illegible]	௦	௭	௦
[illegible]	௦	௧	௦
[illegible]	௦	௨	௦
[illegible]	௦	௨	௦
[illegible]	௧	௦	௦
[illegible]	௦	௨	௦
[illegible]	௦	௧	௦
[illegible]	௦	௧	௦
[illegible]	௦	௦	௬
[illegible]	௦	௪	௦
[illegible]	௦	௦	௬
[illegible]	௦	௦	௬
[illegible]	௦	௮	௦
[illegible]	௦	௧	௦
[illegible]	௦	௫	௦
[illegible]	௦	௬	௦
[illegible]	௦	௬	௦
[illegible]	௦	௧	௦
[illegible]	௦	௨	௦
[illegible]	௦	௧	௬
[illegible]	௦	௩	௦
[illegible]	௦	௦	௬
[illegible]	௦	௧	௦
[illegible]	௦	௧	௦
[illegible]	௦	௨	௦
[illegible]	௦	௬	௦
[illegible]	௦	௬	௦
[illegible]	௦	௧௦	௦
[illegible]	௦	௮	௦
[illegible]	௦	௫	௦
மறுபிறப்பு.	0	0	6
நீதிக்கீர்த்தனை.	0	1	6
ஆசௌசவிதி.	0	2	0
ஆன்மாவும் சரீரமும்.	0	0	6
ஆனந்தநடராஜர்பேரில்பாடியசிவசங்கர தீக்ஷிதர் கீர்த்தனம்.	0	0	6

Chidambaram:—Printed and Published for the Proprietor at the Brahmavidya Press, No 76 Senkalooneer Pilliar koil Street.

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾.

[illegible]

𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑍀.

[illegible]

[illegible]

ப்ரம்மவித்தியா.

சிதம்பரம்:—விரோதிஞு தை-மீ 4-உ. சனிக்கிழமை.

வேதாந்தி.

பத்திரிகாநண்பர்காள்!

இப்பெயர்வாய்ந்த ஓர் பத்திரிகை சிறிதுகாலமாய் வெளியாகிவருகிறது. அப்பத்திரிகை விசேஷமாய் "ஸ்ரீ சங்கராசாரியசுவாமிகள்" அருளிய அத்துவிதசித்தாந்தத்தையனுசரித்து நடத்தப்பட்டுவருகின்றது. இக்காலத்தில் ஆங்கிலேயபாஷையிற்றானே பயிற்சிபெற்று அதிற்றானே புத்தகங்களைப் படிப்பதேயன்றி மற்றதைத் தொடுவதில்லையென சங்கற்பித்துநிற்கும் சிலர்க்கு இதுஓர்பெரிய சாதகமாயிருக்குமென்பது எமதபிப்பிராயம். இக்காலத்தில் அத்துவிதமதம் அநேகமாய்ஒழிந்துபோய்விட்டதுர் தப்பபிப்பிராயங்கள்பலிந்தன. அனதிகாரிகள்தொட்டார்கள். இதை நல்வழிதப்பி உபயோகித்தார்கள். இப்பத்திரிகையில் விசேஷமாய் உலகசரித்திரமின்மையாலும்,எல்லோரும் படிக்கத்தகாதல்லதாலும் விசேஷமாய் இதுசில வாவதுகடினம். ஆயினும் இவ்விதப்பத்திரிகைகளை நடத்துபவர்கள் சுபாவத்தில் பரோபகாரசிந்தையுள்ளவரென்று நம்பவேண்டுவது உண்மை. இவ்விஷயம் சொல்லவேண்டுவது அதிக அவ்சியமில்லை. இவ்வளவுகாலத்தில் நமது "ப்ரம்மவித்தியா" பத்திரிகையைப் பின்பற்றியது அநேகம் தமிழ்ப் பத்திரிகைகள் இங்கிலீஷ் சம்ஸ்கிருதபத்திரிகைகள் இவையெல்லாம் பத்திராதிபர் அஜாக்கிரதையினாலும் ஆதரிப்பவர் குறைவினாலும் சொல்லுதற்கரிய நிலையைப்பெற்றன. அந்தோ! ஏதோ நமது "ப்ரம்மவித்தியாவுக்கு"உடன்பிறப்புப்பாக்கியமில்லைப்போலும். இனியேனும்நமதுப்ரம்மவித்தியாவுக்குவாய்த்த இத்தோழிநீடூழிநிலைபெறவேண்டிக் கடவுளதுபேரருளைப்பிரார்த்திப்போமாக.

கிறிஸ்துவின் உபதேசத்தில் அத்துவிதம்.

ஐயா,

இப்புத்தகம் "வேதாந்தி" என்னும் பத்திரிகையில் எடுத்ததே. ஆயினும் அதுவேறுபட்டுவெளிவந்தது அப்பத்திரிகைக் கையொப்பக்காரர்கள்தவிரமற்றவரான கிறிஸ்தவர்முதலாயினோர்க்கும் உபயோகப்பட்டுவரும் அவர்கள்அத்துவிதத்தில் கொண்ட துராக்கிரகத்தை ஒருசமயம்விலக்கும். இப்புத்தகம் பாதிரிமார்பள்ளிகளில்;கற்கும்மாணுக்கர்களுக்கு அதிகஉபயோகம். அவர்கள்விஷயத்திற்றான் யாம் மிகவும் ஜாக்கிரதையா யிருக்கவேண்டும்.

[illegible]

கீர்வாணவாணீவிலாஸம்.

ஐயன்மீர் !!

இப்பெயர்சூடிய இப்பத்திரிகை இப்பொழுதே உதித்துத்தென்னுட்டில்ரசிகர்முன்னிலையில்நின்று அவர்மனங்களிக்கவும் வடமொழிவழக்கம்பெருகவும் விளையவருகின்றது. முழுமுதற்கடவுளாகிய முக்கட்பிரான் திருப்பதிகளிற்சிறந்த திருவையாற்றினின்று இதுதோன்றித்துலங்குகின்றது. இதை நடத்துபவர் ஸ்ரீலெக்ஷ்மணாசாரியார்; அவர்கள்திறமை இந்நாட்டில் எல்லோரும் அறிவார். இதைப்பண்டிதர்களும்கனவான்களும்மற்றவர்களும் விருத்திக்குக்கொண்டுவருவார்களென்று நினைக்கின்றேம். இது இளமையிற்றனே வெகுவிஷயங்களைக்கைக்கொண்டு அழகிய திருவுருவுடன் பெருநடைமிகுந்ததாய் வெளிவருவது எமக்கே களிப்பைப் பெருக்கியது. இப்பத்திரிகை எமது ப்ரம்மவித்தியாபத்திரிகையுடன் கூடியுலாவத்தகுந்ததே. அந்நங்கை வெகுகாலமாய்த் தனக்குற்ற ஓராண்பெயரமைந்ததோழனை எதிர்பார்த்திருக்கின்றுள். சிறிதுகாலத்துக்குமுன் "தலாகானந்தன்" என ஒருவன் பிறந்தும் அவனதுவாழ்நாட்கள்குறுகியது. மிகபரிதாபம்! இனி இப்பத்திரிகைக்காவது அத்திருப்பதியில் எழுந்தருளிய "தர்மசம்வர்த்தனி" மணவாளன் கருணைமாரிபொழிந்துநீடூழிவாழ்வை யளிப்பானென அவனைப் பிரார்த்திக்கின்றேம்.

சம்ஸ்கிருதபாஷை.

யாப்பிலக்கணம், முன்தொடர்பு.

ஐயா, சம்ஸ்கிருதபாஷையில் வழங்கிவரும் யாப்பிலக்கணங்களுள் ஒவ்வொரு புத்தகம் உண்டான காலமும், அப்பிரபந்தங்களை இயற்றினவர் பெயரும் ஒருவாறு எழுதப்பட்டனவல்லவா? இனி விருத்த ரத்நாகரத்தின் உரைகளான நீசோதினி, மணிநிதிமுதலிய புத்தகங்களை எழுதிய இரண்டொருவர் சமீபகாலத்தவரென்றும் வெளியாகிறது. இச்சந்தோமஞ்சரி என்னும் ஓர் யாப்பிலக்கணம் எளியநடையில் யாப்பு இயல்களை எடுத்து விளக்குவதாய் வடமொழிப் புலமைபூண்டொழுகும் கவிவாணர்க்கு மிக உபயோகமுள்ளதாய் இந்நாட்டிற் சஞ்சரிக்கின்றது. அப்புத்தகம் எழுதியவர் பெயரும், எழுதி முற்றுப்பெற்ற காலமும் இஃதெனத் துணிந்துரைக்கக் குறி யாதும் பெறவில்லை. இவ்விலக்கணங்களிலகப்படாது இந்நூலார் எடுத்து விரித்த "ப்ரஸ்தாரம் என்னும் வழியால் குறிப்பிடத்தக்க பல யாப்புகள், சில அரிய காவியங்களிலும் புராணங்களிலும் அகப்படுகின்

[illegible]

றன. அவற்றிற்குப் பெயரும் இலக்கணங்களும கற்பிக்கப்பட வேண்டுவதே. என்னையெனில், கரைபிரண்டோடும் இவ்வடமொழிச்சொற் கடலை மக்கள் மதி எனும் மரக்கலங்கடவாது. ஆதலினுற்றுன மற்றைய பாஷைகளில் பற்பல புலவர்கள் பெயர்பெற்றதுபோல் இப்பாஷையில் இதுகாறும் சொற்களை யெல்லாம் சுருக்கி ஓர் கோசம் (Dictionary) எழுதினவன் ஒருவருமில்லை. பண்டிதர்மணியும் மகாமேதாவியுமான "தாராநாத தர்க்கவாசஸ்பதி" ஓர் பெரிய நிகண்டு எழுதினுராயினும், அவரும் பலத்திரம், ஸ்திமை, தமாமுதலிய பற்பல சொற்களை விட்டுவிட்டார். இனி முற்றிலும் எழுதுபவர்தான் யாரோ அறியேம். பெரியோரிடஞ் சென்று முழுமையுங் கற்று முதிர்ந்து இதற்கென ஓயாதுழைத்து இடம் பொருள் ஏவல் ஒருங்கு சேரப்பெற்ற இம்மகா பண்டிதரே இரண்டொரு சொற்களை விடுவாராணுல் வேறு யார்வர் இச்சொற்கடலைக் கடந்திடுவார்! இவ்வித சாதனங்கள் குறைவாலன்றே ஆசிரியர் பதஞ்சலியினும் அதிகமேதாவியெனப் புலவர் கொண்டாடப் புகழ்பெற்ற எமது தந்தை எழுதிவந்த கிருதந்தகோசமும் முடிவுபெருது ஒழிந்தது. இவ்விஷயத்தில் நமது வடமொழிக்குச் சிறிதும் சம்மதமற்ற மேற்றிசையார் எவ்விதம் அதிகாரியாவார்கள்? அவர்கள் படும்பாடு மிக வியக்கத்தக்கதேயாயினும் இவ்வடமொழிச் சொற்கள் நீடூழிகாலமாய் அவர் முகத்திற்குடிகொள்ள நல்லகாலம் பஞ்சாங்கங்களின் வேற்றுமையாலோ ஏதோ நற்காலமின்னதெனத் துணியாது ஓடி ஒளிந்து உருமாறித்திரிகின்றது. இவ்விடத்திற் சொல்லவேண்டுவது யாதெனில் எல்லாமறிந்த ஆசிரியர் பாணினியாரும் பல இலக்கியங்களை விட்டார். ஆசிரியர் பதஞ்சலியாரும் அவைகளைக் குறித்தாரேயொழிய முற்றிலும் எடுத்தாரில்லை. இவ்விதம் அறிஞர்க்கும் மதிமயக்கம் பயக்கும் இவ்வடமொழிச் சொற்றெகுதியில் எல்லாமறிய வல்லவனுன ஏகநாதனன்றி மற்றெவனும் முற்றிலும் இலக்கணங்களைக் கற்றவனென்று எதிர்வந்து நிற்பானென்றெண்ணினேமில்லை. நிற்க. இக்காலத்து ஆலங்காரிகளிலொருவரும், திருவனந்தபுரம் மகாராஜா சமஸ்தானத்துப் பண்டிதருமான இலத்தூர் ராமசுவாமிசாஸ்திரிகளென்பவர் "விசாகமகாராஜா" என்பவரை நாயகனுக வைத்துச்செய்த ஓர் பிரபந்தத்தில் பற்பல அபூர்வவிர்த்தங்களை உபயோகப்படுத்தியிருக்கிறுர். யாமும் சப்தரத்னுவளியிற் சில அரிய விர்த்தங்களைக் காட்டினேம். நமது உடன்பிறந்தவர் பட்டஸ்ரீ பாலசரஸ்வதி சுதர்சனர் என்பவரும் தாமெழுதிய 90 - நாடகங்களிலும் மற்றைய பிரபந்தங்களிலும் பற்பல அருமையான விர்த்தங்களைப் பிரயோகம்பண்ணியிருக்கின்றுர். ஆதலால் இக்காலத்துக் கவிகளுக்கு இலக்கியங்களல்லது

[illegible]

இலக்கணங்கள் இவ்விருதிறத்தில் ஏதேனும் ஒன்றைப்பற்றி நிற்றலே போதுமாயினும், இலக்கணங்களை அறியவிரும்புவோரைப்பற்றியே இங்கு இவ்வளவு எழுதினேமென்றறிக. மற்றைய அங்கங்களைப்பற்றிப் பின்வரும்.

கன்மம்.

தொடர்பு.

ஐயா!

முன் வினவியதற்கு மறுமொழி:—உலகத்தில் அநாதியாயுள்ள வஸ்துவும் நசித்தலைக்கண்டோம். பாருமின்! விதைகளில் முளைக்குஞ் சத்தியும், முளைகளில காலத்தால் விதைகளை யுண்டாக்குஞ் சத்தியும் அளவிலாக்காலத்தால் அமைந்திருப்பதைப்பற்றி விவாதம் யாதிருக்கின்றது? நிலமும் நீரும் நல்லதேயாயினும் அந்நிலத்தில் பதிந்துகிடக்கும் ஓர் சிறிய கற்றுண்டு முளைக்குமோ? முளைத்துப் பருக்காத வெறுங்கட்டை விதைகளைத்தான் உண்டாக்குமோ? ஆராயுங்கால் விதையும் முளையும் சங்கிலித்தொடர்பாய்க் காரியகாரணபாவம் ஏற்பட்டதாக அறியவேண்டும். இதற்குஆதிகாலமொன்று கற்பிப்போமேல் முளையில்லாவிடத்து விதையும், விதையில்லாவிடத்து முளையும் இன்றியமையாது. இனி அவ்விதங்காணுமைபற்றி அதை யொப்புவோமெனின், அச்சக்தி வறுத்த விதையிலும், வாடின முளையிலும் ஒழிந்துபோகின்றதே. இனி அவ்விடத்தில் நிலம், நீர் முதலிய ஏனைய காரணங்களு மில்லையெனச் சாற்றலும் பொருந்தாது. வறுத்த எவ்வித முளையையும் நன்னிலத்திற்றுனே புதைத்து எவ்வித நன்னீரை அதற்குப் பொழிந்தாலும், அதன்மேல் கதிரவனொளி காய்ந்தாலும், அது முளைப்பதில்லை. அவ்விதமே வாடின முளையும் எவ்விதச் செய்கையாலும் மீண்டும் ஓங்குவதில்லை. இங்ஙனங் கண்டோமாதலால் விதைகளின்கண் முளைக்குஞ் சக்தி நீங்கிபதுபோல் "வாசனையால் ஜனமும், ஜன்மத்தால் கன்மமும், கன்மத்தால் வாசனையு" மென்று மாறிமாறி வந்த கன்மம் ஏன் ஒழியாது? இனி விதையில் "அவ்வாற்றல் முற்றிலும் ஒழிவதில்லை; இவ்வமைப்பினின்று விடுபட்டு வெளிவந்த அவ்விந்து காலத்தால் மறுபடி முளைக்குந்தன்மையுளதாய் முடியு" மென வாதிப்பிரேல், இங்கும் சில கிரியைகளாற் கன்மமொழிந்தும், சிறிது கன்மம் ஒழியாது நின்றவிடம் மறுபடி ஜன்ம முதலியவை காணப்படுமென்பதே துணிபு. இவ்விடத்தில் அணுவான பிந்துவைச் சுடினும் அதில் அறிவு குன்றுவதில்லை என்பதுபோல், அங்கும் கன்மவாசனை குன்றுமேயன்றி அறிவு குன்றுவதில்லை யென்பது ஆன்றோர் கருத்து.

[illegible]

இனி விதையை வெதுப்பினால் அவ்விதையின்கண் அமைந்த ஜீவனென்னும் போற்றலுக்கு முத்தி என்பது கைகூடுமோ? இல்லை! இல்லை!! அவ்விடம் முளைப்பதற்கு ஏதுவான ஆற்றல் ஒழியினும் ஆக்கையை அவாவுஞ் சக்தி யொழியாதென்க. அவ்விடத்திற்றான் தனுகரணங்களைப் பெறுந்தன்மை யுண்டாமென்பது உட்கருத்து. ஆதலினாற்றான் தீக்ஷைமுதலிய கன்மங்கள் பண்டைய மலங்களை யெரித்து ஆன்மாவின்கண் அநாதியிலமைந்த இம்மானிட சரீரத துவக்கத்தை ஒழிக்குமேயன்றி மற்றையவிடம் எமக்குக்கிட்டும் தனுகரணங்களை யொழிக்காதெனச் சிலர் கருத்து. மற்றோர் சார்பினர் கூற்றியாதெனில்: "இஃது ஓரோவழித் திருட்டாந்தமாக்கினேமேயன்றி வேறில்லையாதலின், அநாதியும் ஒழியுமென்பதால் வாசனைகள் முற்றிலும் ஒழிந்தவிடம் கன்மம் ஒழிவதே மோக்ஷமெனப்படு" மென்பார். இவ்விஷயத்திற் கொள்கை வேறுபாடுளதேனும் ப்ரம்மஞானம் பெற்றவர்க்குக் கன்மமில்லையென்பது எல்லோரும் ஒப்பியதுணிபு. உலகத்திலுள்ள எப்பொருளைப்பற்றி எவ்வறிவும் வாசனைகளுக்கேதுவாதலால் அவைகளுள்ளவிடம் மேன்மேலுங் கன்மங்கள் பெருகிவருமேயன்றிப் பரம்பொருளைப்பற்றிய அறிவு ஒன்றேயொழிய பற்றேதும் அக்கன்மத்தை யொழிக்காது. ஓர் அளவிலடங்கிய கன்மங்களை மற்றோர் வரம்பிலடங்கிய எவ்வித வாசனைகளும் ஒழிக்க வலிமையற்றதல்லவா? ஆயின் கன்மம் ப்ரம்மஞானத்தால் ஒழிக்குமென்பது நாட்டப்பட்டது. இனி ப்ரம்மஞானத்தாற்றான் வீடுபெறுமெனின், கன்மத்தின் பயன் யாதெனக்கருதி மற்றோர் கேள்வி. "ஞானமாத்திரத்தால் மக்கள் முத்திபெறுரோ?" என்பது. இதனுட்கருத்து:—மக்கட்குக் கன்மகோடிகளாலும், பிறப்பு இறப்பு என்னுஞ் சம்சாரம் ஒழியாது கன்மம் ஒழிந்தவிடமே வீடு கூடுமெனச்சாற்றலால், கன்மத்தால் துன்பமே பயக்குமன்றி இன்பங்கூடாதென முடிவதால், அக்கன்மம் நித்தமென்பதும், அனுட்டிக்கற்பாலதென்பதும் எவ்விதம்? அந்தோ! "உள்ளியுட்கொண்டும் உட்பிணி தீர்ந்ததில்லை யென்பதுபோல் பிறப்பிறப்பென்னும் பெரும்பிணி நீங்காவழி கன்மங்களால் யாம் பெறும் பயன் யாது? மேலும், கன்மத்தால் நமதுள்ளமும் உடலும் ஓர்வழி சுத்திபெறும்; அச்சுத்தி யெய்திய திருவுளத்தின்கண் ப்ரம்மஞானமுதிக்கும்; ஞானத்தாற்றான் வீடுபெறுவான்" எனக்காரிய காரணத்தொடர்பு உண்டெனினும், முத்திக்கு முதற்காரணமாயுள்ளது அறிவேயாதலால், அதற்குச் சாதனமாய் இக்கன்மம்போல் மற்றொன்றும் அந்நிலமை ஓர் சமயம் பெறலாமென்பது. இதற்கு விடை:—முத்திக்கு முதற்காரணம் அறிவென்பதும், கன்மமென்பது பரம்பரையில் காரணமென்ப துண்மை

[illegible]

யே. யாம் முற்கூறியபடி உள்ளமும் உடலும் ஒருவழி சுத்திபெறுமிடம் நல்லறிவுதோன்றுதாதலின், அவ்வறிவிற்குக் கன்மமின்றி வேறு காரணங் கிடைப்பதரிதே. ஆதலாற்றான், முத்திக்கு முதற்காரணமாய் அறிவைப் பெறுதற்குக் கன்மமே முக்கிய சாதனம். அறிவைப் பெற்றவர்களும் இக்கன்மத்தில் இருவகை முயல்வார்கள். உண்டாகிய நல்லறிவு நிலைத்தற்பொருட்டும், அஃது நிலைத்தவிடம் உலகத்தாரும் இவ்விதமனுட்டித்து மேலான பதவியைப் பெறுவாரென உலோகோபகாரத்தின் பொருட்டுமாம். உலகத்தில் முத்தர், முமுக்ஷுக்கள், பத்தர் எனக் கன்மத்திற்கதிகாரிகள் மூவர். இவர்களுள் முத்தர் (இவ்விடம் முத்தரென்பவர் ஜீவன் முத்தரே; விதேக கைவல்லியம் பெற்றவர்க்குச் சரீரமின்மையின், அதைப்பற்றிய கன்மங்களும் அவ்வுடலுடன் உடனிகழ்ந்து ஒழிதலாலென்க.) உலோகோபகாரார்த்தமாய்க் கன்மங்களைக் கொள்வார்கள். மற்று முமுக்ஷுக்களோ தம்மிடந் தோன்றும் ப்ரம்மஞானத்தை நிலைநிறுத்தற்பொருட்டும், உள்ளம் உடல் இவை நிர்மலமாதற்பொருட்டும் கன்மங்களைக் கொள்வார்கள். உள்ளமும் உடலும் ஒரு முகூர்த்தம் சுத்திசெய்யாவிடில் அஃது மலத்தால் நிறைவது அதனியற்கையன்றோ? உண்மலம் ஒழியும்வரையில் சுத்தி செய்வது இன்றியமையாதது. இனிப் பத்தான்மாக்களுக்கும் உள்ளம் உடல் சுத்தி இன்றியமையாதல்பற்றி அவர்களுக்கும் கன்மம் வேண்டுவதே. அவர்க்கும் ஒருக்கால் இக்கன்ம வழியில் நல்லறிவு கிட்டும். ஆதலின், உலகத்தில் எவ்வித அதிகாரியுங் கன்மம் பயனற்றதெனச்சாற்ற எதிரிடானென்பது ஆன்றோர் கருத்து.

மற்றது பின்வரும்.

ஊஹாபுரேசுவரி ஸ்துதியும், ஸாரார்த்த கற்பகதருவும்.

அறிஞர்காள்! இவ்வாண்டு இதேமுதலாய் முன் விஞ்ஞானசிந்தாமணிப் பத்திரிகாசிரியரான ஸ்ரீமான் புன்னசேரி நம்பி நீலகண்ட கவிவாணரது நற்காவியங்கள் எமது திருநோக்குத் தீக்ஷை யெய்தியன. இவற்றுள் ஊஹாபுரேசுவரிஸ்துதி யென்பது சொற்சுவை பொருட்சுவை இவ்விருவகைச் சுவைகளுடன் ஒன்பதுங்கலந்துநின்றது. அங்ஙனம் மகிஷமங்கள பாணமென்பதும் நமது நீலகண்டர் செய்தருளிய ஸாரார்த்த கற்பகவல்லி யென்னும் சிற்றுரையுடன் கூடியதாதலால் எம்மை அளவுகடந்து புகழச்செய்தது.

[illegible]

விக்கிரகாராதனமும் விஷபேதியும்.

பத்திரிகாநண்பர்காள் சிறிது கவனியுமின்! சுமார் 40-வருடகாலமாய் இத்தேசத்தில் இம்மகாரோகமொன்று தோன்றி இவ்விடத்திலுள்ள ஜனங்களை வெகுவாகத் தொலைத்துவருவதை யாம் காண்கின்றோம். இவ்விந்தியாதேசத்தில் ஒவ்வோரிடத்திலில்லாவிடினும் எந்தப்பாகத்திலாவது இருந்துகொண்டே எக்காலத்தும் தன் வேலையை நடாத்திவருகின்றது. முற்காலத்துப் பெரியோரெழுதிய வைத்திய சாஸ்திரங்களுள் இந்த ரோகத்திற்கு இயற்கையிற்கூறிய உபத்திரவங்களிலும் அதிகமான உபத்திரவத்தைத் தற்காலந் தருகின்றது. இங்கு பல பண்டிதர்களும் இவ்வுண்மையையறியாது தியங்குகின்றனர். இந்நோய் அதிக உஷ்ணத்தாற் பிறக்குமென்றும், கோடைகாலத்திற்றானுண்டாகுமென்றும், சிலர் இது சீதத்தாற்றான் பிறக்குமென்றும், பனிநாட்கட்கே உரியதென்றும், மற்றுஞ்சிலர் கால அளவுகடந்து வீசும் விழக்காற்று சரீரத்திற்றாக்கின் இஃது உண்டாமென்றுங் கருதுவர். அதிசாரரோகங்களின் வேற்றுமையில் இதுவுமொன்றென ஓர் சார்பினர் கூறுவர். இவர்கள் தத்தம் புத்திக்கெட்டியவாறு தம்மாலியன்றமட்டும் இதற்கு மருந்து கொடுத்துவருகிறார்கள். இவ்விஷயத்தில் அரசாங்கத்தார் தக்க முயற்சிசெய்து பற்பல புதிய ஔஷதங்களைக் கற்பித்துக் கார்த்திகையாதந் தொடங்கித் தைமாதமீறாக விநியோகித்து வருகிறார்கள். அவற்றுள் விசேஷமாய் ஓமப்புகைநீர், நமச்சாரச்சத்து (Clorodine) கஞ்சித்திராபகம், (Sulphuric-acid) கற்பூரச்சத்து (Essential of Camphor)முதலிய ஔஷதங்களே. அங்ஙனம் அபின்கலந்த மாத்திரைகளும் உபயோகப்படுகின்றன. (Cholera-pills) மற்றுஞ் சில தேர்ந்த வைத்தியர்கள் இந்த ரோகத்திற்குப் பிரதானமாகக் கற்பூரமே வைரியென்று அதையே கைகாடிவருகிறார்கள். இதற்கு உற்பத்தி அசீர்ணத்தாலென்பது எல்லோருமறிந்ததே. இஃதுண்டாவது அநேகமாக அழுக்கு நிறைந்தவிடங்களாலும் நாட்சென்ற குளிர்ந்த ஆகாரங்களாலும். பழைய மாம்சங்களாலும், எல்லைகடந்த ஆகாரத்தை உட்கோடலாலுமே அதுண்டாவது. இதுகாறும் இம்மகா ரோகத்தாலொழியும் ஜனத்தொகையிற் பாதிக்குமேல் புலாலுண்பவர்களும், ஜனங்கள் நெருங்கியவிடங்களில் அசுத்த ஸ்தலங்களிற் குடியிருப்பவர்களும், ஊசியுலர்ந்த பழைய ஆகாரத்தை யுட்கொள்ளுபவர்களுமாகவே யிருக்கிறார்கள். இதுவரையில் யாம் கண்டமட்டிலும் கேட்டமட்டிலும் தம்பாசா

[illegible]

ரங்களைக் கைநழுவவிடாது காப்பாற்றிவந்த அந்தணரொருவரும் இம்மகாரோகத்திற்கிரையானாரில்லை. இனி இம் மகா ரோகத்தால் எவனேனுமோர் அந்தணர் ஒழிவரோல், இவன் பழைய சோற்றையேனும் மற்றைய அசுத்த வஸ்துக்களையேனும் உட்கொண்டானென்பது துணிபே. நூற்றுககணக்காக இவ்விதம் ஜனங்கள் மடிந்துவர, தார், குங்கிலியம் முதலிய வஸ்துக்களை நெருப்பிலிட்டு அதன் புகையைச் சுழன்றுவரச்செய்வதும் ஓர்வகைச் சாந்தியாகயிருக்கிறது. நண்பர்காள்! நம்முன்னோர் இதுவிஷயத்திற் செய்துவந்ததைச் சிறிதுரைப்பாம். கேண்மின்! அவர்கள் இது "கார்த்திகைமாதத்தின் பிற்பாதியும், மார்கழியின் முற்பாதியும் யமனது கடவாய்ப் பற்களைப்போன்றதாதலின், அக்காலம் குறைந்த ஆகாரத்தை யுட்கொள்ளுபவனே பிழைப்பான்" என்றார். ஆதலின் அக்காலத்திற் பனி மிகுதியால் வாதம் ஓங்கவும், பித்தம படியவும், அஜீர்ணமுண்டாக அதன்மூலமாகவே இதுவும் உண்டாகின்றது. இவ்விஷயங்களை யறிந்த நம் முன்னோர் இக்காலத்தி லெல்லா ஜனங்களு மநுட்டிக்கும்படி சில ஏற்பாடுகளைச்செய்து அவ்விதம் நடாத்தினர். ஆதலாற்றான் அக்காலத்தில் இந்த ரோகம் பேர்மாத்திரையில் நின்றது. முற்காலத்திற் கார்த்திகைபிறந்தால் வீட்டிற்குள்ள பழைய அழுக்குக்களை விலக்கிப் புதுமண்ணிடுவதும், வீடுகளிற் தீபங்களை மிகுதியாக வைப்பதும், அகண்ட தீபங்களை வைத்து ஆராதிப்பதும், சந்திரகிரணத்தால் அதிகசைத்தியங்காணக்கூடிய பர்வகாலத்திற் தேவாலயங்களிற் பெரு நெருப்புக்களை (சொக்கப்பானை) யுண்டாக்கி அதனாற் கார்மிலுறைந்த குளிரை நீக்கி இலேசாக்குவதும் வழக்கமாகக்கொண்டு வந்தார்கள். அக்காலத்திற் கடவுள் வழிபாடு விசேஷமாய் நடக்கும். உயர்ந்த கோபுரம், மலைமுதலியவிடங்களில் ஏராளமாய்க் கற்பூரங்களை வைத்தெரித்து அங்கு கடவுள் வழிபாட்டுக்கெனச்சென்று அந்நாற்றத்தை யுட்கொள்வார்கள். குழந்தைகள் கைகளிற் சிறு வர்த்திகளைக்கொண்டு அவற்றிற் குங்கிலியப்பொடிகளைப் போடுவார்கள். அங்ஙனம் கட்டை நெருப்புமுதலிய விளையாட்டு அக்காலத்திலதிகம். வடநாடுகளிலனேகர் அதே காலத்தில் வெடிமருந்துகளை விநியோகிக்கும் வழக்கங்களை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். வரும்.

வேதம்.

ஐயா!

தமது பத்திரிகையின் 7-வது இலக்கத்திற் பரசமயிகளுடைய உபாதையைப் பொறுக்கமாட்டாமல் "இராசீபுரம் ந. வை." என்பவர் எழுதியிருக்கும் கடிதத்திலடங்கிய முறையைப்பார்க்க மிகுந்த விசனமுண்டாகின்றது. இந்துக்களுக்கு வேதமிருக்கிறதென்று பரசமயிகளுக்கு ரூபிக்கப் பிரமாணங்கள் காட்ட அவசியமேன்? "ஒவ்வோரிடத்தில் வசனங்களை" ஏன் சொல்லவேண்டும். இப்படிப் பிரமாணங்காட்டி அவர்களைத் திருப்திப்படுத்த முடியாவிடில், வேதகோஷணையால் இரவும் பகலுமிடைவிடாது ரீங்காரம்ஒலியானின்ற திருவையாறு (பஞ்சநதக்ஷேத்திரம்) முதலிய ஸ்தலங்களுக்கு அவர்களை வழிகாட்டுவது உத்தமமாயிருக்குமன்றோ? நான் இப்படிச் சொல்லுவதினால் வேதம் புஸ்தகரூபமாயில்லையென்று நினைக்கவேண்டாம். இதனடியிலுதஹரிக்கப்பட்டிருக்கும் புஸ்தகங்கள் என்னிடத்தில் விலைக்ககப்படும். அவைகளனைத்தும் தெலுங்கு லிபியிலச்சிடப்பட்டிருக்கின்றன. தெலுங்கு அக்ஷரங்களைச் சுலபத்திலப்பியசிக்கக்கூடுமாதலால் "இராசீபுரம் ந. வை. என்பவர் முதலில் அவைகளை வாங்கிக்கொண்டு அவரைப் பரிஹசித்த பரசமயிகளின் வாயை யடக்குவாரென்று நம்புகிறேன். தனது மேல்விலாசத்தை யெனக்குத் தெரியப்படுத்தி "வால்யூபேயபில் பார்ஸல்" ஆக அனுப்பச்சொன்னால் அப்புஸ்தகங்களையனுப்பச் சித்தமாயிருக்கிறேன்.

புத்தகங்களின் விவரம். தபாற்கூலியில்லாமல விலை யஜுர்வேதசம்ஹித ஸப்தகாண்டங்களும் ஸ்வரபேடிகஸஹிதமாய் நன்றாய்க் கட்டப்பட்ட (பைண்டு செய்யப்பட்டது) புஸ்தகம் 5—0—0 ஷை க, உ, ரு, ச காண்டங்கள் மாத்திரம் அடங்கிய புத்தகம் 4—0—0 ஷை ரு, சா, எ, காண்டங்கள் மாத்திரம் அடங்கியது. 2—0—0. கிருஷ்ண யஜுர்வேதம் கர்மார்த்த ஞானார்த்தஸஹிதமாய் 16 -அல்லது 24 - புடங்கள் (பக்கங்கள்) உள்ள புத்தகம் மாசத்திற்கொன்றுவீதம் அச்சிடப்பட்டுவருகின்றது. 16. பக்கங்களுள்ள புத்தகமானால் விலை அணா 2. 24. பக்கங்களுள்ளதானால் விலை அணா 3. இப்பொழுது பத்துமாதகாலமாயச்சிடப்பட்டுவருகின்றது. 10. புத்தகங்கள் தயாராகவிருக்கின்றன. அவற்றின்விலை 1—6—0 இனிமேல்வரும்புத்தகங்களுக்குப் பக்கங்களுக்குத் தகுந்தபடி 2-அணா அல்லது 3-அணா கொடுத்து வாங்கிக்கொள்ளலாம். 5-ருக்வேத ஐதரேயப் ராம்மணம் 1—0—0.

Lectnre on Vedam	0 1 0.
Lectnre on Vedam No· 2.	0 2 0

இதுபோலகாலக்ரமேண இந்த சம்மந்தமான புத்தகங்களையச்சிட்டுப் பிரசுரிக்க உத்தேசமுண்டு. ஆசீர்வசனமந்திரம், ஔபாசன மந்திரம், மந்திரபுஷ்பம் முதலான சில புத்தகங்களும் தெலுங்கு அர்த்தத்துடன் அச்சிடப்பட்டிருக்கின்றன. அவைகளும் என்னிடமகப்படும். என்னுடைய மேல்விலாசம்:—பல்லாரி சன்மார்க்க ஸமாஜத்தின் காரியதரிசி டி. எ. சுவாமிநாத ஐயர்.

திருவையாறு - அ. சுவாமிநாத ஐயா.

அறிக்கை.

கையொப்பக் கனவான்களே வந்தனம்!

இப்பொழுது நம் ப்ரம்மவித்தியாவிற்கு நான்காவது ஆண்டு தொடங்கி 6 - மாதங்கள் நடந்தமையால் பழைய பாக்கிகளையும் நடக்கும் வருஷத்தின் சந்தாவையும் கிருபைகூர்ந்து அனுப்பின் பத்திரிகை சோர்வின்றி நடைபெறப் பேருதவியாக விருக்கும். நமது பில்கலெக்டர் வசூலுக்குச் சென்றகாலத்தில் சிலர் பிறகனுப்புவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அக்கனவான்கள் இத்தருணம் அவர்களால் சேரவேண்டிய தொகையையனுப்பிஆதரித்துவரக்கோருகின்றோம்.

பத்திராதிபர்.

பத்திரிகா நண்பர்காள்! கடந்தநவம்பர்மாதம் 1-உ வெளியான பத்திரிகையில் ஒருமாதம் தாமதமாகவெளிப்பட்டு வந்ததற்குக் காரணங்காட்டியிருந்தோம். அதுபற்றியே தபாலாபீசுக்குப் பத்திரிகை அனுப்புவதற்காக முன்பணங்கட்ட டிக்ளரேஷன் வாங்கக்காலம் தப்பிவிட்டமையாலும், ஜனவரிமுதல் உத்திரவு கிடைத்தமையாலும், சென்ற டிசம்பர்மாதம் 31-உ பத்திரிகை வெளிவராது தடைப்பட்டுநின்றது. மெம்பர்கள் தொடர்ச்சியாகப் போட்டுக்கொண்டுவருகிறபடியால் இப்பொழுது விட்டுப்போன பத்திரிகைகளெல்லாம் வருடமுடிவிற்சேர்த்துக்கொள்ளப்படும்.

மானேஜர்.

விளம்பரம்.

சிதம்பரம் புதுத்தெருவில் வசிக்கும் சி. அண்ணாசாமி ஐயரவர்களாற் செய்யப்பட்ட ஸ்ரீஆனந்த நடராஜர் பேரில் அழகிய கீர்த்தனம், ஜாவளி பதம், வேதாந்ததங்கப்பண், குயிற்பண், கிளிப்பண் முதலிய பல பண்கள், பஜனோபகாரமான நலங்கு, ஊஞ்சல் இவைகளனைத்தையும் ஒன்றாய்த்திரட்டி ஒரே புத்தகமாய் அச்சிட்டிருக்கின்றனர். இக்கீர்த்தனம் பதம் பண்ணினங்களாகிய பலவும் படிப்போர் கேட்போர் முதலிய அனைவோர்க்கும் இன்பத்தைக் கொடுக்கத்தக்க எளியநடையும், அர்த்தபுஷ்டியும் பக்திசிருஷ்டியும் பொருந்தி விளக்குகின்றன. இதனை யெல்லோரும் வாங்கி வாசித்தற்பொருட்டுச் சுலபமாக 2-அணா விலை இட்டிருக்கின்றது. வேண்டுவோர் சிதம்பரம் ப்ரம்மவித்தியா அச்சியந்திரசாலையிற் பெற்றுக்கொள்ளலாம்.

ப்ரம்மவித்தியா பத்திரிகையின் 4-வது வருஷக் கையொப்பப் பண வரவு.

ம-ள-ள-ஸ்ரீ	ரூ	அ	பை
எம்.ஸி. ராமசாமி ஐயரவர்கள் சிதம்பரம்.	2	,,	,,
அகோரசிவாசாரியசுவாமிகள் அவர்கள் ஷை	2	12	,,
சி. ரெங்கசாமிமுதலியார் வில்லைராயநத்தம்.	2	12	
மருதையாபிள்ளையவர்கள் நாகை.	2	4	,,
			,,

பார்த்தசாரதிஐயங்காரவர்கள் பொன்னேரி.	2	12	,,
இராமசுவாமிஐயரவர்கள் S: ger.	1	12	,,
கிருஷ்ணசாமிஐயங்காரவர்கள்கோயமுத்தூர்.	2	12	,,
பி. வெங்கடேசுவர ஐயரவர்கள் மேலூர்.	3	,,	,,
வெங்கிடசாமிநாயகரவர்கள் சாத்தூர்	2	12	,,
இராகவஐயரவர்கள் பாபநாசம.	2	12	,,
சுப்பிரமணியஐயரவர்கள் மைசூர்.	,,	4	,,
சுப்பிரமணியஐயரவர்கள் திருவனந்தபுரம்	2	12	,,
சிவானந்தசுவாமிகள் திருவாலூர்.	2	12	,,
என். சண்முகப்பிள்ளையவர்கள்நாகபட்டணம்	2	12	,,
டி-என்-நாராயணசாமிபிள்ளை தூத்துக்குடி	2	12	,,
H. H. உதயவர்மராஜா அவர்கள் நார்த்மலபார்.	2	3	,,
கிஷ்ணமாசாரியார் அவர்கள், தூத்துக்குடி.	2	12	,,
சாம்பமூர்த்திஐயரவர்கள் பல்லாரி.	2	12	,,
சக்கிரபாணிஐயரவர்கள் நாகை.	2	12	,,
ரெத்தினசபாபதிப்பிள்ளை நாகை.	2	12	,,
சுப்பிரமணியஐயரவர்கள் நாகை.	2	12	,,
மகாதேவஐயரவர்கள் ஷை	2	12	,,
என்-பி-சுப்பிரமணியஐயரவர்கள் ஷை	2	12	,,
வி. அருணசலசெட்டியார் அவர்கள் ஷை	2	12	,,
ரத்தினசிங்கு அவர்கள் மாண்டலே.	2	12	,,
ஸ்ரீநிவாச ஐயங்காரவர்கள் செங்கிரிதுருக்கம்	1	4	,,
சிரங்கசெட்டியார் அவர்கள்பொள்ளாச்சி.	1	8	,,
குமாரசுவாமிப்பிள்ளையவர்கள் கூடலூர்.	2	12	,,
கே. வெங்கிட்டராமையரவர்கள் ஷை	1	6	,,
கே. இராமசுவாமி ஐயரவர்கள் நெல்லூர்	2	12	,,
அண்ணசாமிசாஸ்திரிகள் யாழ்ப்பாணம்.	2	12	,,
சாம்பமூர்த்திப்பிள்ளை அவர்கள் சேவக் கோட்டை மதுரா ஏரிப்பாளையம்.	2	12	,,
ஜி. சுந்தரமையர் அவர்கள் பழனி.	1	6	,,
அப்பா-சீதாராமையரவர்கள் வேயுளயாத்தூர்	1	,,	,,
மாரிமுத்தாசாரியாரவர்கள் பீமநகர்	1	8	,,
பி. கே. நாராயணஐயரவர்கள் பெரியகுளம்	,,	14	,,
சுந்தரேசுவாஐயரவர்கள் மொரட்டூர்.	1	8	,,
புட்டா-அருணசலசெட்டியார்வாணியம்பாடி.	1	,,	,,
சிவராமசெட்டியார்அவர்கள் பெரியகுளம்	2	12	,,
சங்கரசாஸ்திரிகள் சங்கரநயினார்கோவில்.	2	12	,,
எ. கிருஷ்ணையரவர்கள் காளயார்கோவில்.	1	6	,,

ப்ரம்மவித்தியா பத்திரிகை.

ப்ரம்மவித்தியா பத்திரிகையை வண்ணனுக்குப் போட்டீர்கள்போலும்! அவன் அதை வெளுத்துக்கொண்டு வரக் கொஞ்சம் தாமதமாயினும் நன்றாய்ச் சலவைசெய்திருக்கிறான். அதை உத்தேசிக்கின் அந்தத் தாமதமொருபொருட்டல்ல. இது ஆரியாசாரப் பிரகடனையின் பலிதார்த்தமேயாகும். தீபாவளிக்காகப் புது வேஷ்டி வாங்கினதுபோலுமாகும். எவ்விதத்திலும் சுசி, ருசியே ஆசாரத்தின் கருத்து. தமது பத்திரிகையில் ருசியிருந்தும் சுசி போதாமலிருந்தது. சுசியில்லா ருசி கொஞ்சம அசமாதானமாயிருக்கக்கூடும். இப்பொழுது அது சுசி ருசியுடன்கூட யிருத்தலால் அநேகர் அதை வாங்கிப்படித்து அதன் பலனை யனுபவிப்பாரென்று நம்புகின்றேன். ப்ரம்மவித்தையின் உத்தேசமே ஆனந்தம். அதைப் பயிலுவோர்க்குத் துணைக்கருவியாகிய இந்தப்பத்திரிகையும் அதற்குத் தக்கபடி நல்ல உடுப்புகளுடன் ஆனந்தகரமாகவேயிருக்கின்றது.

திருவையாறு - அ. சுவாமிநாதையர், பல்லாரி.

[illegible]			
[illegible]	௦	௧௨	௦
[illegible]	௦	௧	௦
[illegible]	௦	௧	௦
[illegible]	௨	௦	௦
[illegible]	௦	௧௨	௦
[illegible]	௦	௮	௦
[illegible]	௦	௪	௦
[illegible]	௦	௭	௦
[illegible]	௦	௧	௦
[illegible]	௦	௨	௦
[illegible]	௦	௨	௦
[illegible]	௧	௦	௦
[illegible]	௦	௨	௦
[illegible]	௦	௧	௦
[illegible]	௦	௧	௦
[illegible]	௦	௦	௬
[illegible]	௦	௪	௦
[illegible]	௦	௦	௬
[illegible]	௦	௦	௬
[illegible]	௦	௮	௦
[illegible]	௦	௧	௦
[illegible]	௦	௫	௦
[illegible]	௦	௬	௦
[illegible]	௦	௬	௦
[illegible]	௦	௧	௦
ஶிவராத்ரிநிர்ணய:	௦	௨	௦
[illegible]	௦	௧	௬
[illegible]	௦	௩	௦
[illegible]	௦	௦	௬
[illegible]	௦	௧	௦
[illegible]	௦	௧	௦
[illegible]	௦	௨	௦
[illegible]	௦	௬	௦
[illegible] ஷை	௦	௬	௦
[illegible] ஷை	௦	௧௦	௦

Chidambaram:—Printed and Published for the Proprietor at the Brahmavidya Press, No 76. Sen-kalooneer Pilliar koil Street.

ப்ரஹ்மவித்யா.

பத்திரகிரயம்.
1-௵ 2 12 0
6-௴ 1 8 0
3-௴ 0 14 0
1-காபி 0 2 6
இலங்கைக்கு 3 8 0

ப்ரம்மவித்தியா பத்திரிகை.

BRAHMAVIDYAPATHRIKA.

பத்திர கிரயத்தை மணியார்டராகவாவதல்லது ரூபா 1-க்கு. அணா 1-சேர்த்துத்தபால் லேபிலாகவாவது சிதம்பரம்ப்ரம்மவித்தியா ப்ரெஸ் மானேஜருக்கு அனுப்பவேண்டும்.

மாதம் இருமுறை பிரசுரஞ் செய்யப்படும்.

[illegible] ‖ [illegible] ‖

௪-ம புத்தகம்] சிதம்பரம்:— ௧௮௯௰ ஞூ மே௴ ௧௫ [இலக்கம்-௰௮

பத்ரிகாவிஷய:

௧. [illegible]

௨. [illegible]

௩. [illegible]

௪. [illegible]

௫. [illegible]

௬. [illegible]

௭. [illegible]

இதி.

ரா. நாராயணார்ய:

[illegible]

[illegible]

பத்திரிகாவிதானங்கள்.

௧. பத்திரிகை வேண்டுவோர் ப்ரமமவித்தியாப்ரெஸ் மானேஜருக்கு முன்பணமாகவேயனுப்பிப் பெற்றுக்கொள்ளவேணடும்.

௨. கடிதமுதலியவைகளும் மேற்படிமானேஜருக்கே அனுப்புதல்வேண்டும்.

௩. பத்திரிகையிற் பிரசுரிக்கும்பொருட்டு அனுப்பப்படும் கடிதங்கள் காகிதத்தின் ஒரே பக்கத்தில் நல்லமை கொண்டு, சுத்தரூபமாகவும், பொதுவிருத்திக்கேற்றதாகவும் எழுதப்படல்வேண்டும். தூஷணமடங்கிய கடிதங்கள் இடம்பெறு.

௪. கையொப்பக்காரர்கள் ஊர் பெயர் முதலியவைற நன்றாக எழுதியனுப்புதல் வேண்டும. வேறு ஊவருக்குப்போக நேரிடின் அவ்விலாசத்தை அறிவித்தல் வேணடும்.

௫. இன்னும் இதைப்பற்றிவிவரம் அறியவேண்டுவோர் அரையணு லேபிலாவது ரிப்பிளை கார்டாவது அனுப்பித்தெரிந்துகொள்ளலாம்.

௬. அனுப்பப்பட்ட கடிதங்கள் எவ்வித அசௌகரியத்தினுலாவது பிரசுரிக்கப்படாவிடில் திரும்பவும் வாப்சு செய்யப்படா.

௭. முன்பணம் அனுப்பாதவர்களுக்கு பத்திரிகை யனுப்பப்படமாட்டாது.

ரா. நாராயணசாமி ஐயர்,
மானேஜர்,
ப்ரம்மவித்தியா ப்ரெஸ்,
சிதம்பரம்.